உ
சிவமயம்

# சைவப்பிரகாச வித்தியாசாலை

## நெல்லிப்பழை கிழக்கு



# பொன் விழா மலர்

## 1952

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# பாடசாலைக் கீதம்

பல்லவி

வாழ்த்து வோம் நாமே வையகந் தனிலே
வளர் மதி போல் வளர்க வென்றே —(வாழ்)

அனுபல்லவி

தெல்லி கிழக்கில் சிறந்தே விளங்கும்
சைவப்பிர காச வித்யா சாலையை —(வாழ்)

சரணம்

அந்தணர் குலத்து வந்தவ தரித்த
சுந்தர மூர்த்தித் தோன்றல தன்னையும்
சந்ததமும் நாம் சிந்தையி லெண்ணும்
அந்த மில் சீர்த்து ரையப்பா தன்னையும் —(வாழ்)

வெய்யவ னுதிக்க விரியு மப்புயம்
செய்ய சின்னமாய்ச் சிறந் தொளிரவும்
மெய்ப் பொருள் காண்டல் மெய்யறி வென்னும்
வையகம் புகழும் வாய் மொழி வெல்லவும் —(வாழ்)

சைவமும் தமிழும் சாத்திரம் பலவும்
தெய்வ பக்தியும் சிறந்தே யிலங்க
மெய்மை யோடன்பு மேவிடும் முயற்சி
கைவர மாணவர் கதித்தே துலங்க —(வாழ்)

பால்மணம் அருத பாலகர் தமைப்
பாரினில் வாழப் பண்படுத்திடும்
சால்புறும் பாட சாலையா சிரியர்
மேலவர் புகழ மேன்மை யெய்திட —(வாழ்)

வித்தியாசா லையை விருத்தி செய்தலே
உத்தம தொண்டாய் உளத்திற் கொண்டிடும்
சத்தியன் ஆன்றோர் சாலவே புகழ்
உத்தமன் ஜயரத்தினக் கோமானை —(வாழ்)

## பொன்விழா நிர்வாகசபை உறுப்பினர்

திரு தெ. து. ஜயரத்தினம் அவர்கள் தலைவர்
,, சி. கந்தவனம் ,,
,, பொன். அம்பலவாணர் ,,
,, தெ. மு. செல்லப்பாபிள்ளை ,, உபதலைவர்கள்
,, மு. இராமுப்பிள்ளை ,, கள்
,, ந. சபாரத்தினம் ,,

,, சின்னத்தம்பு ,, இணைக்காதரிசி
,, தி. சுந்தரமூர்த்தி ,, கள்

,, செ. சிவசுப்பிரமணியம் ,,
,, ந. சுந்தரமூர்த்தி ,, தனாதிகாரிகள்
,, நெ. ஆ. சுவாமிநாதன் ,,

திரு வி. சுப்பிரமணியம் அவர்கள்
,, சு. அம்பலவாணர் ,,
,, சி. ஆறுமுகம் ,,
,, அ. கந்தையா ,,

திரு. யோ. க. செல்லப்பா அவர்கள்
,, வி. அப்பர்சுவாமி ,,
பிரம்மஸ்ரீ வ. குகசர்மா ,,
திரு மூ. சின்னப்பா ,,
,, மூ. வன்னியசிங்கம் ,,
,, கு. ஆறுமுகசுவாமி ,,
,, சி. நடராசா ,,
திரு து. ஐயாத்துரை ,,
,, சி. செல்லத்துரை ,,
,, நா. ஆறுமுகம் ,,
,, பொ. கந்தையா ,,
,, க. சுப்பிரமணியம் ,,

திரு. பொ. கனகரத்தினம் அவர்கள்

இப்பொன்விழா மலர்மணம் பெற்றோர் அபிமானிகளாயுள்ளார்க்கு இன்பமும் புத்துணர்ச்சியும் ஊட்டுமென்னும் நம்பிக்கையுடன் வெளியிடுகின்றோம். மிகச் சுருங்கிய காலத்தில் வெளியிட நேரிட்டமையின் எமது கற்பனையில் தோன்றியவாறு வெளியிட முடியாமையையிட்டு வருந்துகிறோம். விஷயதானம் செய்தோர்க்கும் இம்மலர் வெளியீட்டுக்குப் பொருளுதவி புரிந்தவர்க்கும் மனமார்ந்த நன்றியுரியது. குற்றங் களைந்து குணங் கொள்க.

—பத்திராசிரியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மாவைப்பதி

பண்டிதமணி

க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார்

அவர்கள் பாடிய

## பொன்நாண் மங்கல வாழ்த்து.

ஆசிரிய விருத்தம்.

சீரும் சிறப்பும் செற்பொதியும்
    திலைத்த பெயரும திருவாழ்வும்
ஊரும் படைக்கக் கற்பவருக்
    குவந்து தருவாய் தெல்லிநகர்ச்
சாரும் சைவப் பிரகாச
    வித்தியாசாலை நீவாழி
காரும் தருவும் முகிலுமெனக்
    கருதும் பயனைத் தந்துகொண்டே. 1

கண்ணைப் பெருக்கி நலம்பெருக்கி
    நாகரீக வாழ்க்கை யெனும்
பண்ணைப் பெருக்கிப் பயன்பெருக்கிப்
    பக்தி யூற்றிற் பெருகவைக்கும்
தண்மைச் சைவப் பிரகாச
    வித்தியா சாலை தானதுவே
கண்மை கொண்டு வாழியரோ
    கற்போர்க் கின்பம் பெருகிடவே 2

அன்பே பொலிய அருள் பொலிய
    அறத்தின் வழியே அமைந்தபொருள்
இன்பே பொலிய மன்பதைகட்
    கெண்ணெண் கலையும் ஈகின்றாய்
தன்பேர் சைவப் பிரகாச
    வித்யாசாலை இனிநீயே
பொன்பேர் அணிமங் கலம் பூண்டாய்
    பூண்பாய் வைர மங்கலமே. 3

மைவைத் தணிந்த வருண் மிடற்றான்
    மதிச்செஞ் சடையான் மலர்ப்பாதங்
கைவைத் துருகித் தொழும்பு செய்யக்
    கற்பிக் கின்ற கருணையினல்
உய்வைத் தந்தெங் குலங்காத்தே
    ஊழி வளர்க்கு மொருபெருமைத்
தைவச் சைவப் பிரகாச
    வித்யா சாலை வாழியரோ. 4

## பொன்மலர் தருமணம்.

போற்றுது மென்றும் பொன்விழா முகிழ்த்த
ஒருதனிப் பெருமலர் தருநறு மணமே
பொன்மலர் நாற்றம் பெற்றுள தன்றெனப்
பன்முறை நிறுவுமிப் பாருளோர் ஏமுற
மெல்லியல் அம்பிகை மெய்யருள் சுரக்கும்
தெல்லிமா நகரின் சீரியோர் தொட்ட
சைவப் பிரகாசத் தமிழ்ச்சுனை அகத்து ஓர்
புத்திளம் பொன்மலர் பூத்தெழுந்ததுவே-அப்
பொன்விழாமலர் தன்மெல்லிதழ்அவிழ்தொறும்
தமிழொடு தழீஇய சைவத் திருமணம்
மூச்சினில் முகர்வினில் மேலெழுந்தனை இயதே
கலைஞரும் அறிஞரும் களிப்பினில் மூழ்கிடக்
கமழ்ந்தெழு சுகந்தமிக் கடிநக ருறைவோர்
இருட்பிணி அகற்றி மருட்பிணி களைந்து
வஞ்சம் பொறாமை மனமறி பொய்யென
அஞ்சுவ செயும் நோய் அகற்றும் மருந்தாய்
சாதி வகுப்பெனும் பேதமது போக்கி
"ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும்
நன்றேசெய்தல் நம்சிவ நெறியாம்
எல்லாவுயிரும் இன்புறப் பேணி
அன்பு செய்வதே அரண்பணி" யெனநம்
ஆன்றோர் சான்ற அறிவொளிபரப்பி
உண்மை நுண்தாதால் உளமாசு ஒரீஇ
அன்பினில் அறத்தினிற் பண்பட வளர்த்துத்
துன்பம் துடைக்கும் இன்ப சஞ்சீவியாய்
கலையிளந் தென்றல் அசைதொறும் கமழும்
பொன்விழாப் புதுமலர் போற்றுதும் பெரிதே.

தெல்லிப்பழை க. அருந்தவநாயகி.

# தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை
## பொன்விழா மலர். 1952.

### கடவுள் வணக்கம்.

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

வேதமோர் நான்காயா றங்கமாகி விரிக்கின்ற பொருட்கெல்லாம் வித்துமாகிக்
கூதலாய்ப் பொழிகின்ற மாரியாகிக் குவலயங்கண் முழுதுமாய்க் கொண்டலாகிக்
காதலால் வானவர்கள் போற்றியென்றுங் கடிமலர்களவை தூவியேத்தநின்ற
பாதியோர் மாதினனைப்பாசூர் மேயபரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே.

புராணம்

யாவ ரும்பெரு மகிழ்ச்சியால் இன்புறப் பயந்த
பாவை நல்லுறுப் பணிகிளர் பண்பெலாம் நோக்கிப்
பூவினுளென வருதலிற் பூம்பாவை என்றே
மேவும் நாமமும் விளம்பினர் புவியின்மேல் விளங்க

திருச்சிற்றம்பலம்

### முகவுரை.

தமிழ்மக்களின் இருகண்ணெனப் போற்றப்படும் சைவமும் தமிழும் வளர்ப்பான் வேண்டி அந்தணர்குலத்துஅருந்தவப் பெரியார் பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயரவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற தெல்லிப்பழை கிழக்குச்சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஐம்பதாவது ஆண்டு நிரம்பிப் பொன்விழா கொண்டாடப்படு மமையத்து அவ்வைபவத்தை நினைவு கூரும் நோக்கமாய்ப் பொன்விழாமலர்பிரசுரித்தல் சாலவும் விரும்பத்தக்கதொன்று. ஆகவே இக்கைங்கரியத்தைச் செய்வதற்குப் பொன்விழாச் சபைக் குழுவினர் சார்பாகப் பாடசாலையின் தற்போதைய ஆசிரியர்கள் முன்வந்து தொண்டாற்றுவதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இம்மலரின்கண் பாடசாலைச் சரித்திரக் குறிப்புகளும் சென்ற ஐம்பது ஆண்டுகளிலும்நடந்தசிற்சில சம்பவச் சித்திரங்களும் இடம்பெறுவது பாடசாலை வளர்ச்சிக்காக உழைத்துவந்த பெரியார்களுக்கும் பழைய ஆசிரிய மாணவர்களுக்கும் தமிழபிமானிகளுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கு மென்பதில் ஐயமில்லை. பழைய நினைவுகளை நுகரும் இன்பம் தலையாயதாதலாலும் எதிர்காலச் சந்ததியாருக்குப் பாடசாலைச் சரித்திரத்தை யெடுத்துச்சொல்லுஞ் சாசனமொன்று வேண்டுமாதலாலும் பொன்விழாவினைச் சிறப்பிப்பதற்கு ஒரு வெளியீடு பொருத்தமாதலாலும் இம்மலரைஅபிமானிகட்கு மனமுவந்து சமர்ப்பிக்கின்றோம்.

எமது நன்முயற்சிக்குப் பெரியார்கள் தமது ஆசியையும் அன்பையும் வரையாது வழங்குவார்களென்பது எனது மனப்பூர்வமான கருத்து.

**தெ. து. ஜயரத்தினம்**
பொன்விழாநிர்வாகசபைத்தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பொன்விழா ஆசிச் செய்தி.

மலேயாவில் கிள்ளான் கூட்டுறவுச் சங்கமுன்னாள் தலைவரும் கிள்ளான் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் முன்னாள் தலைவரும் தற்போதைய பரிபாலகரில் ஒருவரும் தமிழ்ப்பண்ணை (கோலாலம்பூர்கிளை உபதலைவரும் சிலாங்கூர் சிலோன் சைவர் சங்கக் காரியதரிசியும் கோலாலம்பூர் பி. டபிள்யு. டி. ஆபீஸ் சீவ்சிளாக் உத்தியோகமாயிருப்பவருமான

**ஸ்ரீ செவ்வந்திநாதன்** அனுப்பியது.

தலைவர் அவர்கள்,

சைவப்பிரகாச வித்தியாசாலை,

பொன்விழாக்குழு,

தெல்லிப்பழை.

அன்புடைய சைவப் பெருந்தகையாளர் அவர்கட்கு,

தாங்கள் எளியேன்பால் பேரன்பு கொண்டு அனுப்பியுள்ள தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை அழைப்பிதழ் கிடைக்கப்பெற்று அக மகிழ்ந்தேன். அதற்கு நன்றி கூறுகின்றேன். பொன்விழாவில் கலந்துகொண்டு களிப்பெய்த இங்கிருப்பதால் இயலவில்லை. எனினும் எளியேன் உள்ளம் அன்றையத்தினம் அங்குலவிக்களிகொள்ளும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நம் வித்தியாசாலை பழமையும் சிறப்பும் பாங்குற மிளிர்வது. இப்பள்ளியின் புகழுக்குப் பாத்திரமானவர் அதைநிறுவிய காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி ஐயர் நம்மூர் வாசிகளில் ஐயரை அறியாதார் மிகச் சிலர். ஐயரவர்களது சிவக்கோலமும் தவமாண்பும் அவர் மாணவருடன் மாணவராய்ப்பழகி, ஆற்றல் மிகப் பெருக்கிஆளாக்கும்மெய்க்கல்வியினைப் புகட்டுவிப்பதும்இன்னும் என மனக்கண் முன் காட்சியளிக்கின்றன. சுந்தரமூர்த்தியால் சைவம்தழைத்தது. சைவத்தால் சுந்தரரின் பெற்றி தேவாரமாய்ப் பரிணமித்தது. பெயருக்கேற்றவாறு ஐயர் கண்ட வித்தியாசாலை அபிவிருத்தியும் புகழும் ஓங்கிப் பொன்விழாக் கொண்டாடுகிறது.

என் தந்தையர் காலஞ்சென்ற தெ. செ. ஆறுமுகம் அவர்கள் தங்கள் பள்ளியில் ஆசிரியராய்ச் சிறப்புறப் பணியாற்றியவர். மேலும் நான் அவரது மைந்தன் என்ற முறையில் பெருமை கொள்ளுகிறேன். எளியேனது வித்தியாப்பியாசமும் தங்கள் பள்ளியிலேயே துவங்கியது. "நாடிப்பணிந்தோதி நற்சேர்க்கைத் தொண்டுடனே சீடன் மெய்கற்றல் சிறப்பு" என்ற மெய்மொழிக்கேற்றவாறு என்னை இன்றைய சிறப்புடைய நிலைக்கு உருவாக்கியது என்பதில்எளியேன்மிகப் பெருமைகொள்ளுகிறேன். பள்ளித்தலமனைத்தும் கோவில் செய்குவோம் என்றார் அமரகவி பாரதியார் இதையொப்ப இப்பள்ளியின் பெருமைக்கும் உரிமைக்கும் சான்றாய் விளங்கும் தற்போதைய வித்தியாசாலை அதிபர் ஆசிரியர்கள் மாணவமாணவிகள் தெல்லிப்பழை வாசிகள் அனைவரின் பெருமையை எங்ஙனம் போற்றுவது?

நம் வித்தியாசாலைப் பூங்கோதை பொன்னசியாவள். அவ்வம்மை சைவத்திரு, தமிழ்த்திரு, குணமணி, ஞானவொளி. அம்மையின் புகழ் இலங்கை, இந்தியா, மலாயா போன்ற பல நாடுகளிலும் பரவியுள்ளது. அவளது ஆசிரிய, மாணவ மைந்தர்களால் அச்சிறப் பெய்தியது. அது என்றும் பொன்றாப் பொலிவுடன் நிலவுகின்றது. இனியும் நிலவும்.

பூங்கோதையின் பொன்விழாவைக் கொண்டாடுங்கால், எளியேன் உள்ளத்தில்,பல, பழையநினைவுகள் பளிச்சிடுகின்றன. அம்மையின் சிறப்பிற்கு அழகொளி பரப்பிய சிலரை இவண் குறிப்பிடுதல் சாலப் பொருத்தமாகும். ஸ்தாபகர் சுந்தரமூர்த்தி ஐயரவர்களின் தீர்க்க தரிசனமும், ஆழ்ந்த கல்விப்புலமையும் முற்போக்கான செயலும், எண்ணமும், இன்று பயனளித்து, வித்தியாசாலை, பல்லாற்றானும் முன்னேறிவருவது பாராட்டுதற்குரியது. ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய இப்பள்ளி, சைவத்திற்கும், தமிழுக்கும் அருந் தொண்டாற்றியுள்ளது. அங்ஙனமில்லாவிடில் தெல்லிப்பழை இன்று எவ்வாறிருக்குமென்று என்னால் கூறுதற்கில்லை. அக்காலம் எளியேன் தமிழ்க் கல்வி பயின்றகாலை "நீர் எங்கு படிக்கின்றீர்"? அல்லது எங்குபடித்தீர்? என்று எவரேனும் ஒருவரைக் கேட்டால் நான் சுந்தரமூர்த்தி ஐயரவர்களது வித்தியாசாலையில்தான் படிக்கிறேன் அல்லது படித்தேன் என்று அவ்வூர்த் தமிழர் கூறிவந்ததை நான் கேட்டிருக்கிறேன். ஐயரவர்கள் இவ் வித்தியாசாலையின் மூலம் சைவ சமய வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியுள்ளார். நாயன்மார் குருபூசைகள், நவராத்திரிபூசைத்தினங்கள் முதலியன பக்தி சிரத்தையுடன் அக்காலங்களில் நடைபெற்றுவந்தன. நியாயவாதியும் சைவப்பெரியாருமாகிய திரு. க. தம்பையா அவர்களுடைய திருநீற்றுப் பூச்சும், உருத்திராக்கமணிந்த சிவனடியார் தோற்றமும் என்னால் இன்னும் மறக்கமுடியவில்லை. அறவொழுக்கம்.பூண்டுபெருவாழ்க்கைநடாத்திய ஐயரவர்களின்பெருமகன் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ தியாகராசையர்,பிரம்மஸ்ரீ செல்லையா ஐயர் மாவிட்டபுரம் செல்லையாஉபாத்தியாயர் என அந்தை 'சட்டம்பியார்' போன்றோரின் சொற்களும் செயல்களும் இதுகாலைஎமதுநினைவுக்குவராமல்விலை

இன்றைய உலக நிலை கலக நிலையா யிருக்கின்றது. பலவித அரசியற் கொந்தளிப்புகள், நவீன எண்ணப் புயல்கள், வறுமைப்பிணி, பசிப்பிணி முதலியன சூழ்ந்து நம்மை உலகில் தாக்குகின்றன. மாந்தர் இவற்றால் மோதுறாது வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி துலக்கி, "ஆற்றல் மிகப் பெருக்கி ஆளாக்குங் கல்வியினைப் பொலிவிப்பது" நம்சைவப் பிரகாச வித்தியாசாலையாகும்.

இச்சைவப் பள்ளியின் வளர்ச்சி இன்னும் வளமுற ஓங்கிப் பரவுக. அதன் பொன்விழா பொலிந்து வெற்றி பெறுக. அதன் நிர்வாகிகளும் குருமார்களும் மாணவ மாணவிகளும் மற்றும் தெல்லிப்பழை வாசிகளும், இவ் வித்தியாலயத்திலிருந்து வெளிப்போந்து இன்று வாழ்க்கைப்படியில் சிறந்தோங்கும் மெய்யன்பர்களும் சிறந்து பொலிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# தெல்லிப்பழை கிழக்குச் சைவப்பிரகாச வித்தியாசாலை

# பொன்விழாவின்போது

## காரியதரிசிகளினால் சமர்ப்பிக்கப்பெற்ற

## அறிக்கை

சைவமும் தமிழும் ஒருசேரப் பண்பாடமைந்த பெருந்தலைவர் அவர்களே! அரும்பெருந் தொண்டாற்ற முன்வந்திருக்கும் பெரியோர்களே! சகோதர சகோதரிகளே! மாணவர்களே! வணக்கம்.

முழுமுதற் பொருளாகிய சிவபெருமானது திருவாக்காகிய அரியமறைகளின் பிரகாசம்பொருந்தியதும், சமயாதீதப்பழம் பொருளுமாகிய சைவ சமயப் பெரும்பேறு பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் அகவிருள்போக்கி உண்மைஞானம் உதிக்கச் செய்யும் உயர்நோக்குடன் உண்டாய நம் சைவப் பிரகாச வித்தியாசாலை ஐம்பதாம் ஆண்டை அடைந்து விட்டதென்பதை அறிந்த பேரபிமானிகள் பலர் பொன்விழாக் கொண்டாடுதல் பெருமக்கள் மரபு எனத் துணிந்தனர். அவர்களது துணிபு 1950-ம் ஆண்டு டிசெம்பர்மாதம்10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6-30 மணியளவில் மேற்படி வித்தியாசாலை மண்டபத்திற் பழைய மாணவர் பெற்றார் அபிமானிகள் ஆகிய பலரும் கொண்ட ஓர் பேரவையைக் கூட்டி வைத்தது. அப்பேரவையானது இப்பாடசாலை இந்த அரை நூற்றாண்டினுள்பல நூற்றுக்கணக்கான மாணவர்களைப்பயிற்றிஉத்தமசைவசீலர்களாக்கியமாபெரும் புண்ணியச்செயலை எடுத்துரைத்துப் புகழ்ந்ததுமன்றி இப்பாடசாலையின் பொன்விழாவை அதிவிமரிசையாகக் கொண்டாடுதல வேண்டுமென்றும இப்பாடசாலையை ஸ்தாபித்துப்பல ஆண்டுகள் தலைவராகச் செந்தமிழ்த தொண்டாற்றிய பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்திஐயர் அவர்களின் பெயர் என்றும்நின்று நிலவுதற்கான நிலையான யாதேனும் ஒன்றை நிறுவுதல் வேண்டுமென்றும் தீர்மானித்தது. மேலும் இப்பேரவையானது தனது தீர்மானங்களை நிறைவேற்றுவான் கருதித் திருவாளர் தெ. து. ஜெயரத்தினம் B. A. (Lond.) அவர்களைத் தலைமையாகக்கொண்டு இருபத்தொரு பேர்களமைந்த ஒரு காரிய நிர்வாகசபையையும் தெரிவு செய்தது.

இக்காரிய நிர்வாகசபையினர் இப்பேரவையின் கட்டளைக்கமைந்து அவர்களது தீர்மானங்களைப் பூர்த்தி செய்வதற்கு இன்றியமையாதது பணம் என்பதை உணர்ந்து பழைய மாணவர் பெற்றோர், அபிமானிகள் ஆகிய பலரிடமும் நிதி திரட்டுவதற்கான விண்ணப்பங்களை அச்சிட்டு அனுப்பினர். அன்றியும் 27-12-50-ல்பழையமாணவரும் தற்போது யாழ்ப்பாண டிஸ்திறிக் வித்தியாதரிசியுமாகிய திருவாளர் அ. சரவணமுத்து அவர்கள் தலைமையில் ஓர் பகிரங்கக் கூட்டமும் கூட்டுவித்தனர். அக்கூட்டத்தில் இந்துசாதனப்பத்திராதிபர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரவித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் அவர்களும்சிறந்தசொற்பொழிவாற்றினர். இலங்கையின் பல்வேறுபாகங்களிலும் தமது சேவையின்பொருட்டுச் சென்றுநததார் விடுமுறையின்போது தம் தாய்நாடு வந்து நின்ற பலருக்கு அவ்வமயம் இப்பகிரங்கக்கூட்டம் அதிகபயனளித்தது.

இக்காரிய நிர்வாகசபையினர் ஐயரவர்களின் ஞாபகார்த்தமாகப் பாடசாலை அயலில ஓர் காணியை வாங்கிப் பாடசாலை மாணவர்களின் விளையாட்டு நிலமாக விடலாமெனப் பலமுயற்சி செய்தும் பயன் அடையாது விட்டனர். பாடசாலைக் கிராமத்தில் மாத்திரமன்று, அயற்கிராமங்களிலும் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும், சென்று நிதி திரட்டினர். மலாயா நாட்டில் உள்ள பழைய மாணவர் அன்பர் களுக்கெல்லாம் நிதிக்கான விண்ணப்பங்கள் அனுப்பினர். மொத்தமாக இரண்டாயிரம் ரூபாவரையிற் திரட்டினர். அன்றியும் சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிமானியும் பிரசித்த தனவந்தருமாகிய திருவாளர். மு. இராமுப்பிள்ளை அவர்களின் அன்பைப்பெற்று அன்னாரின் அன்பளிப்பாக இப்பாடசாலைக்கெனச் சிறந்த வாசிகசாலைக் கட்டிட மொன்றையும் அமைப்பித்தனர்.

இக்காரியநிர்வாகசபையினர் தாம்ஈட்டியுள்ள 2000 ரூபாவுடன் மேலும் கடன்பெற்று ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்திஐயர் அவர்களின் ஞாபகார்த்தமாகப் பாலர் களரிக் கட்டிடமொன்றைப் புதிதாக அமைத்துள்ளனர். அன்றியும் ஐயரவர்களின்உருவப் படம் ஒன்றையும் எழுதுவித்துள்ளனர். ஐயரவர்களுக்கு உறுதுணையாய் நின்று பன்னெடுநாளாய்ப் பாலர்களைப் பயிற்றியும் பயன் கருதாது தொண்டாற்றியும் வந்த காலஞ்சென்ற திரு. செ. ஆறுமுகச் சட்டம்பியார் அவர்களின் உருவப்படம் ஒன்றுநிறுவுதல் அவசியம் எனக் கருதி அன்னாரின் உருவப் படம்ஒன்றையும் எழுதுவித்துள்ளனர். சென்ற இரண்டு ஆண்டுகளிலும் இக்காரிய நிர்வாகசபையினர் மொத்தமாகப் பன்னிரண்டு கூட்டங்கள் கூடியிருக்கின்றனர்.

இவற்றையெல்லாம் அவ்வாறு பூர்த்தியாக முடிப்பதற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 3500 ரூபாவரையிலிருக்கும். இதில் சேகரிக்கப்பட்ட பணம்ஏறக்குறைய 2000 ரூபா.1500 ரூபாவரையில் இன்னமும கடன்பணமாகவே இருக்கின்றது இக்கடனை ஓர்அளவில் தீர்ப்பதற்காகவும்பொன்விழா வைபவத்தை ஞாபகப்படுத்தும் நோக்கமாகவும் பொன்விழாமலர் வெளியிடப்படுகிறது. அபிமானிகள்அவற்றைப்பெற்று இயன்றபொருளுதவிபுரிந்து கடனைத் தீர்த்து வைக்கும்படி பணிவாகக் கேட்டுக் கொள்ளப்பெறுகின்றனர். ஐம்பது ஆண்டுகள் வரை அருஞ்சேவை புரிந்து உயர்தர நியாயவாதிகளுக்கும சட்டநூலறிஞர்களுக்கும் ஆங்கிலவைத்தியர்களுக்கும்வித்தியாதரிசிகளுககும் B. A.போன்ற சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுககும் அத்திவாரமாகிய ஆரம்பக்கல்வியை ஊட்டிய இவ்வரிய ஸ்தாபனத்தைப் பற்றியாவது அல்லது தன்னலங்கருதா மாபெரும் புண்ணியராம ஸ்தாபகராகிய ஐயரவர்களைப் பற்றியாவது யாம் அறிந்தவற்றுள் சிலவற்றைத்தானும் கூறாது விடுதல் இவ்வறிக்கைக்கு ஓர் இழுக்காகும் என நினைந்து ஈண்டுச்சில குறிப்புக்ள் கூற விரும்புகிறோம.

தெல்லிப்பழை கிழக்கில் சைவமணமும் தமிழ் மணமும் கமழுஞ் செந்தமிழ்க் களஞ்சியமாக விளங்கும் இவ்வித்தியாசாலை அந்தணகுல திலகராயும் அருந்தமிழ்க் கடலாயும் அமைந்த பிரம்ம ஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயரவர்களால் 1900-ம் ஆண்டில் அவரது சொந்த இல்லத்தில் அமைக்கப்பெற்ற மண்டபத்தில் ஆரம்பிக்கப்பெற்றது. இவ்வித்தியாசாலையைஸ்தாபிப்பதற்கு திரு சின்னப்பாமணியம், நொத்தாரிஸ் திரு. தெ. ச. துரையப்பா திரு. காசிநாதர் பொன்னம்பலம, வழக்கறிஞர் தி. வ. குமாரசுவாமி, திரு. க. தம்பையா என்னும் பெரியார்கள் பேருதவியாளர்களாகவிளங்கினர். இருபத்தைந்து ஆண்டுகளாக இவ்வித்தியாசாலை ஆரம்பிக்கப்பெற்ற மண்டபத்திலேயே இனிது நடைபெற்று வந்தது. 1901-ம் ஆண்டு இவ்வித்தியாசாலை அரசினர் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவுசெய்யப் பெற்றது. 1902- ம் ஆண்டு வைகாசி மாதம் இப்பாடசாலையின் வருடாந்தப் பரீட்சை முதல் முதலாக நடைபெற்றது. ஆரம்பகாலத்தில் பிரம்மஸ்ரீ ச. கதிர்காமஐயரவர்கள் முகாமைக்காரராக விளங்கினர். பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயரவர்கள் தலைமையாசிரியராகவும்; பிரம்மஸ்ரீ இ.பாலசுப்பிரமணியஐயர்,பிரம்மஸ்ரீ து செல்லையர். ஆறுமுகச்சட்டம்பியார்,திரு சி.செல்லையா,திரு மாப்பாணிச்சட்டம்பியார் என்பவர்கள் உதவியாசிரியர்களாகவும் சேவை புரிந்தனர். பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்ந்திஐயரவர்களின் காலத்தில் திருவாளர்கள் சேர் அம்பலவாணர்-கனகசபை, கோப்பாய் அ. மயில்வாகனம், அப்புக்காத்து திருநாவுக்கரசு, தி. கனகசுந்தரம்பிள்ளை, A. M. சிற்றம்பலம் அண்ணாமலைப்பிள்ளை,P.Sசரவணமுத்து. நெவின்ஸ் செல்வத்துரை ஆகிய பெரியார்கள இவ்வித்தியாசாலையைத் தரிசித்துச் சென்றனர். ஆரம்பகாலத்தில் ஐயரவர்களிடம் கற்றமாணவர்கள் திருவாளர்கள் போன் அம்பலவாணர், வே. தில்லையம்பலம், இ. அப்பாப்பிள்ளை, சி. ஆறுமுகம், த. குமாரசுவாமிஐயர், அ. பொன்னம்பலம், அ. வைத்தியலிங்கம, க. பொன்னையா க.குழந்தைவேலுமுதலிய பலராவர். ஆரம்பகாலத்தில் இருந்து இவ்வித்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை மத்திய பாடசாலையாகவே அரசினர் உதவியொடு இளமதி முழுமதியாயவாறு வளர்ச்சியுற்றோங்கியது. 1918-ம் ஆண்டுவரை பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்திஐயரவர்கள் தலைமை ஆசிரியராக கடமையாற்றினர். அவருக்குப் பின்னர் அவரது சகோதரர் பிரமமஸ்ரீ க. நடராசஐயரவர்கள் தலைமையாசிரியராக அமைந்தனர். பின்னர் அவர் இடமாற்றம் காரணமாக வேறு இடம் செல்ல ஏழாலை வாசர் திரு. இராசேந்திரம் அவர்கள் 1919-ம ஆண்டு தொடககம் 1922-ம் ஆண்டுவரை தலைமையாசிரியராக இருந்து கடமையாற்றினர். அவருக்குப் பின்னர் வலலாய்வாசர் திரு. முத்துலிங்கம அவர்கள் தலைமையாசிரியராக அமைந்து 1926 ம் ஆண்டு வரைசேவைபுரிந்தனர். 1927-ம ஆண்டு திரு. யேக்கப் அவர்கள் தலைமையாசிரியராய் பதவி பெற்றனர். பிரம்மஸ்ரீ க. நடராசையரவர்கள் மீண்டும் தலைமையாசிரியராகக் கடமைபெற்று 1928-ல் தமது பதவியிலிருந்து இளைப்பாறினர் அதன்பின்னர் கலாவிற்பன்னரும் பாடசாலை வளர்ச்சியின் பொருட்டு பெரிதும்உழைத்துவந்தவரும் ஆகிய காலஞ்சென்ற திரு. அ. பரமசாமி அவர்கள் 17-9-28-ல் தலைமையாசிரியராக நியமனம் பெற்றனர் 1943-ம் ஆண்டளவில் ஷெ தலைமையாசிரியர் இடமாற்றங் காரணமாக வேறுபாடசாலைக்குச்செல்ல 1943தொடக்கம் 1944முடியவுள்ள இரு ஆண்டுகளுக்கும் திரு க. நாகலிங்கம் அவர்கள் தலைமையாசிரியராக அமைந்தனர். ஷெ தலைமையர்சிரியர் நீங்க திரு அ. பரமசாமி அவர்கள் மீண்டும் பதவி பெற்று 5-11-48 வரை அருஞ்சேவை புரிந்து அகால மரண மெய்தினர், அவரது மறைவின் பின்னர் உள்ள இடைக காலததில் திரு சுந்தரமூர்ததி அவர்கள் 9-6-48வரை பதில் தலைமையாசிரியராக கடமையாற்றினர் 9-6-48தொடக்கம ஆசிரியநிர்வாகத்திறமைஉடையவரும பாடசாலை வளர்ச்சிக்கே தமதுவாழ்க்கையை அர்ப்பணம் செய்தவருமாகிய திரு து. ஐயாத்துரை அவர்கள தலைமையாசிரியராகப் பதவி பெற்றனர். 1952-ம ஆண்டு பெப்ரவரி மாசத்தில் மேற்படி தலைமையாசிரியர் ஆங்கில ஆசிரிய பயிற்சிககலாசாலைக்குக் கல்வி பயிலும் நோக்கமாகச் செல்ல திரு செ. சிவசுப்பிரமணியம அவர்கள் பதில் தலைமையாசிரியராக இருந்து இன்றுவரை சேவை புரிந்து வருகின்றனர்,

1905-ம் ஆண்டுவரை பிரம்மஸ்ரீ ச. கதிர்காம ஐயரவர்களும் பின்னர் அவரின் கனிஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ க. செல்லையர் அவர்களும் முகாமைக்காரர்களாக விளங்கினர் 1919-ம் ஆண்டு பிரம்மஸ்ரீ சிவஞானக்குருக்களும் 1920-ம் ஆண்டு பிரம்மஸ்ரீ வே. தியாகராசக்குருக்களும் முகாமையாளராக இருந்தனர் பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயரவர்கள் தமது அந்தியகாலத்தில் பாடசாலைப் பொறுப்புரிமைகள் அனைத்தையும் தமது சுவீகாரபுத்திரனாகிய பிரம்மஸ்ரீ அ. தியாகராசஐயரவர்களுக்குக் கையளித்தனர். அவர் 1918 ம ஆண்டு தொடக்கம் 1940-ம் ஆண்டு கார்த்திகைவரை இப்பாடசாலையில் உதவியாசிரியராகக் கடமையாற்றியதுமன்றி, சமய விஷயங்களிலும் பாடசாலை வளர்ச்சியிலும் ஊக்கம் செலுத்தி வந்தனர். அவரது விடாமுயற்சியின பயனுலேயே பாடசாலையில் அமைந்துள்ள கிணறு தோன்றப் பெறுவதாயிற்று. 1940-ம் ஆண்டு கார்த்திகை மாதததில் அவர் அகால மரணம் அடைந்தமை பாடசாலைககோர் துரதிர்ஷ்டமாத்திரமன்று, ஊரவர்களுக்கும் அந்தணர் குலத்திற்கும் ஓர்பெருங் குறைவையும் ஏற்படுத்தியுள்ளது- ஐயரவர்கள் பாடசாலைப் பொறுப்பைக் கொண்டு நடத்துவதன் கஷ்டத்தைஉணர்ந்து 1921-ம் ஆண்டு மேற்படி வித்தியாசாலையின் சகல பொறுப்புக்களையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஸ்தாபகரும் அருந்தமிழோடு ஆங்கிலக்கலா வல்லுனரும் பேராசிரியரும் தனவானுமாகிய ஸ்ரீமான் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்களிடம ஒப்படைத்தனர். அவர் 1923-ம் ஆண்டு முடியுமவரை முகாமைக்காரராக இருந்தனர். 1923-ம ஆண்டில் பாடசாலை இப்பொழுது அமைந்திருககும் நிலத்தை விலைக்கு வாங்கி 1928-ல் ஐயரவர்களின் வீட்டில் இருந்த பாடசாலையை மேற்படி நிலத்தில் ஸ்தாபித்தனர்.

முகாமைக்காரர் அவர்கள் தமது ஆங்கிலபாடசாலை வேலையுடன் முகாமைப் பதவியையும் வகித்தலால் ஏற்படுங் கஷ்டங்களை நினைந்து தமது ஆப்த நண்பரும் அத்துவககாத்தும் பலபாடசாலைகளின் முகாமைக்காரருமாக விளங்கிய திருவாளர். கா. அருளம்பலம் அவர்களை 1944-ம் ஆண்டு முதல் இவ்வித்தியாசாலையின் முகாமைக்காரராக நியமனம் செய்தனர். அவர்காலததில மகாஜனக்கல்லூரித் தலைமையாசிரியரும் அறிவாற்றல் நிரம்பியவரும் ஆகிய திருவாளர் கா. சின்னப்பா ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் 1930-ம் ஆண்டு வரை இப்பாடசாலை முகாமைக்காரருக்காக வித்தியாபகுதியாருடைய கடிதப்போக்குவரத்துக்குப் பொறுப்பாளராகவும் (Corres Pondent) உதவி முகாமைக் காரராகவும் இருந்து பேருதவி அளித்து வந்தனர். அவருடைய காலத்தில இபபாடசாலை உயர்தர கனிஷ்ட பாடசாலையாகவும பின்னர் உயர்தர சிரேஷ்ட பாடசாலையாகவும் உயர்ததப்பட்டமைஈண்டுகுறிப்பிடத் தக்கது. மேற்படி முகாமைககாரர் 1943-ம ஆண்டில் வுலகை நீத்தலும் மகாஜனக் கல்லூரி அதிபரும் ஸ்ரீமான் துரையப்பாபிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரனுமாகிய ஸ்ரீமான து. ஜெயரததினம் அவர்கள் இன்றுவரை முகாமையாளராக இருந்து பாடசாலை வளர்ச்சியிற் கண்ணும் கருத்தும் செலுததி வருகின்றனர்.

ஸ்ரீமான் துரையப்பாபிள்ளை அவர்கள்முகாமையாளராக இருந்த காலததில் வகுப்புககளில் மாணவர் குறைவால் பாடசாலைத்தராதரம பிரதமபாடசாலையாகக் குறைககப்பட இருந்த நிலைமை1931-ம்வருட ஆரம்பத்தில் 6-ம வகுப்புக்கு மேற்பட்ட உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பெற்றதனுல் சீர்திருத்தமடைந்தது 1942-ம் ஆண்டு வரை கனிஷ்டபாடசாலையாக இருந்த இப்பாடசாலையில் அப்பொழுது தலைமையாசிரியராயிருந்த திரு க. நாகலிங்கம் அவர்களும் உடனுசிரியர்களும் காட்டியபேருக்கத்தினுல் 1943-ம் ஆண்டில ஆகஸ்டுமாதம் சிரேஷ்டதராதரப் பத்திர வகுப்பு ஆரம்பமாயது. அவ்வாண்டுதொடக்கம இன்றுவரை நமதுபாடசாலைஉயர்தரசிரேஷ்ட பாடசாலையாக விளங்கி வருகின்றது. அபபொழுது இருந்த பாடசாலைக் கட்டிடங்கள் போதியனவாயும சிறந்தனவாயும் இல்லாமையினுல் புதிய மண்டபம ஒன்றுககு அவ்வாண்டிலேயே அஸ்திவாரக்கல் நாட்டப்பெற்றது. 1943-ல் ஆரம்பித்த கட்டிட வேலையானது பொருட் பஞ்சததினுல் மிகமநதமாகவே நடைபெற்று வந்தது. எனினும் ஊரவர்களினதும் அபிமானிகளினதும் பொருள் உதவியினுலும் ஆசிரியர்களது இடையரு ஊக்கத்தினுலும் கட்டிடவேலை பூர்த்தியடைந்து 1947-ம் ஆண்டு யூலைமாதம் 4-ந்திகதி திறப்புவிழா வைபவம் மிக விமரிசையாக Dr S. சுப்பிரமணியம அவர்கள் தலைமையில் கொணடாடப் பெற்றது.

இப்பொழுது பாடசாலையில் 260 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். விசேட தராதரப் பத்திரங்கள் உடைய ஆசிரியர்கள் ஒன்பதின்மர் கல்வி கற்பிக்கின்றனர். 1942-ம் ஆண்டு தொடக்கம் அரசினரால் நடாத்தப்பெறும்பகிரங்க பரீட்சைகளில மாணவர்கள் விசேடமான சித்தியடைந்துள்ளனர் சென்ற ஆண்டு இருமாணவர்கள் அரசினர் நன்கொடை வித்தியா விருத்திப்பணம் பெற்றமை உங்களுக்கும் எங்களுக்கும இககிராமத்திற்கும் மிக்க மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும் வட இலங்கைக் கல்விவாரத்திலும் வரைதற்பொருட் காட்சிகளிலும் சுகாதார விழாக்களிலும்வலிவடக்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினரால் நடாததப் பெறும போட்டிகளிலும் அகில இலங்கைச் சைவ இளைஞர் மததியமகா சபையினரால் நடாத்தப் பெறும் தேவார உபந்நியாசப் போட்டிகளிலும் பாடசாலைக் குழூஉப் போட்டிகளிலும்மாணவர்கள் பங்குபற்றிப் பரிசுகளும் தராதரப் பத்திரங்களும் பெற்றுள்ளனர் விவேகானந்த சபையாரால்நடாத்தப்பெற்ற தேவாரப்போட்டியில் சி. சிவனையா என்னும் மாணவர்தங்கப்பதக்கம்பரிசில்பெற்றமை ஈண்டு விசேடமாகக் குறிப்பிடற்பாலது.

இக்கல்விக் கழகமானது ஸ்தாபிக்கப் பெற்ற காலம் முதல் இன்றுவரை ஊரவர்களாகிய பெருமக்களின் ஒத்துழைப்பினுலும், அபிமானிகளினது அன்பினுலும் பழையமாணவர்களது பேருதவியினுலும்முகாமைக்காரரதுசிறந்தமுற்போக்குமிகுந்த கவனத்தினுலும் ஆசிரியர்களது இடையரு ஊக்கத்தினுலும் இளம்பிறை நிறைமதியாதல் போன்று வருடா வருடம் வளர்ச்சியுற்று வருவதைக் கண்டு மகிழாதவர் எவருமேயில்லை. இன்றும் இவ்விடத்து இவ்வளவு பெருந்திரளாகக்குழுமி இக்கொண்டாட்டத்தைச் சிறப்பித்து வைக்குந் தனமையை யார்தான் போற்ருதிருப்பர். இவ்வமையத்தில் பேரபிமானிகள் ஊரவர்கள்பழையமாணவர்கள் இன்னும் இப்பாடசாலையிலும் இவ்வைபவத்திலும் ஆர்வம் கொண்டுள்ள அனைவருக்குமஎம்நன்றியுரித்தாகுக.

மேலும் இக்கல்விக் கழகமானது இக்கிராமத்தில் உள்ளவர்களுக்கும் அயற்கிராமங்களில் உள்ளவர்களுக்கும கல்வித்துறையிலும் சமயத்துறையிலும் பலநன்மைகள் புரிந்து மற்றைய கிராமங்களுக்கோர் முன்மாதிரியாக விளங்கிப் பல்லூழிகாலம் நிலைபெற்றுவாழ எல்லாம்வல்ல இறைவனை வணங்கி இவ்வறிக்கையைப் பூர்த்தி செய்கின்றேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்கள் பாடசாலைப் பெரிய மண்டபம்
திறப்பு விழா 1947.




பாடசாலை ஆசிரியர்கள் 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பது ஆண்டுகள்

(ஆரம்பகாலம்)

பிரமாண்டமான மண்டபம், அலங்காரமான வகுப்பறைகள், நவீனமுறை தழுவிய தலைமையாசிரியர் கந்தோர், தற்காலச் சுகாதார முறைகளுக்கமைந்த மலசல கூடங்கள், பச்சிளங் குழந்தைகள், அவர்களுக்கேற்ற தனித்தனி ஆசனங்கள், கண்கவருங் காட்சிகள், பாலர் வகுப்புத் தொடக்கம் சிரேஷ்ட வகுப்புவரை நடனம், சங்கீதம், கைத்தொழில், கமத்தொழிற் பயிற்சிகள், பண்முறையோடு தேவாரம் ஓதும் பயிற்சிகள், மனையியல் சாஸ்திரம் கற்க அங்கீகரிக்கப் பெற்ற வகுப்புக்கள் நல்ல வசதிகளோடமைந்த நூல் நிலையம், வாசிக சாலை ஆகிய இவையாவும் நிறைந்து விளங்குவது நம் சைவப் பிரகாச வித்தியாசாலை.

1952-ம் ஆண்டு இவ்வளவு காட்சிகளையும் தோற்றங்களையும் அளித்துக்கொண்டிருக்கும் இவ்வுன்னத பாடசாலையின் நிலை, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எவ்வாறிருந்தது? அதன் வளர்ச்சி எப்படி மேலோங்கியது? அவ்வளர்ச்சிக்குக் காரண புருஷர்களாய் விளங்கியவர்கள் யாவர்? எவ்வெக் காலங்களில் எவ்வெவ் வகையான வளர்ச்சிகள் ஏற்பட்டன? என்ற, பழைய வரலாறுகளைப் படிக்க அல்லது கேட்க அதி அவாவும், எல்லையற்ற இன்பமும் உண்டாகும் என்பதில், சந்தேகமேயில்லை.

இப்பாடசாலையின் தோற்றத்திற்குக் காரணம் ஏதோ இருந்துதான் ஆகவேண்டும். 1900-ஆம் ஆண்டளவில் இக்கிராமத்தில் ஒரு ஆங்கில பாடசாலையும், ஒரு தமிழ்ப் பாடசாலையுந்தான் இருந்தன. அவ்விரு பாடசாலைகளும் கிறீஸ்தவ பாடசாலைகளாகவே விளங்கின. அக்காரணத்தினால் சைவப் பண்பாடுகளை அக்காலத்திருந்த இளஞ் சிறார்களிடத்து அழுத்துவதற்கு அதிகம் இடமில்லாதிருந்தது. சைவத்திலும் தமிழிலும் பண்பாடமைந்த அநேக பெற்றோர் பெருமூச் செறிந்து மனக்கவலையுற்றனர். அவர்களுள் திருவாளர்கள். காசிநாதர் - பொன்னம்பலம், வேதவனம், சின்னக்குட்டியார் ஆகியோர் புன்னாலைக் கட்டுவனிலிருந்து இங்குவந்து வாழ்க்கை புரிந்த அதி உத்தம பிராமணராம் உயர்திரு. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களின் சிறந்த இலட்சணங்களிலும், சைவத் தமிழ்ப் பண்பாடுகளிலும், ஆசார ஒழுக்கங்களிலும் வசப்பட்டவர்களாய் அன்னாரிடம் சென்று தங்கள் பிள்ளைகளாகிய அம்பலவாணர், தில்லையம்பலம், ஆறுமுகம் என்பவர்களுக்கு மாலை நேரங்களிலும், சனி ஞாயிற்றுக் கிழமைகளிலும் தமிழறிவும், சைவ உணர்ச்சியும் உண்டாகுமாறு கற்பிக்க வேண்டுமென்று வேண்டினர்.

இப் பெரியார்களுடைய வேண்டுகோளை மறுக்க முடியாதநிலைமையில் பிராமணோத்தமராகிய ஐயரவர்கள் தமது சமயாசார விதிப்படி அமைந்துள்ள அறுவகைத் தொழில்களுள் தலையாய ஓதல், ஓதுவித்தல் என்ற இரண்டினையும் செய்வான் கருதி, அம்மாணவராம் இளஞ்சிறார்களுக்கு தமது இல்லத்திலிருந்தே தொண்டாற்றி வந்தனர்.

இவ்வாறு இவ்வந்தணர் இளஞ்சிறார் சிலருக்குச் சைவப் பயிரையும், தமிழ்ப் பயிரையும், வளர்த்து ஓங்கச் செய்வதற்கு வேண்டிய பண்பாடுகளை ஆக்கி வருகின்றனர் என்னும் செய்தி கிராமத்தில் தீவிரமாகப் பரவியது. திருவாளர் இளையதம்பி, கனகசபை ஆதியோர்களும் தம் பிள்ளைகளுக்குக் கல்விச்செல்வம் பெருகத் துணைபுரியுமாறு ஐயரவர்களை வேண்ட கருணை வள்ளலாகிய ஐயரவர்கள், மணங்கோணாது அப்பாப்பிள்ளை, பொன்னையா என்னும் மாணவர்களையும் தம் மாணவர்களாக ஏற்றுக்கொண்டனர்.

அயற்கிராமங்களிலும் இவ்வந்தணர் பெருமானின் தொண்டினது மகிமை பரவவே கொல்லங்கலட்டியிலுள்ள சைவப் பெரியார் திரு. அம்பலவாணர் அவர்கள் தம் சிறார்களாய பொன்னம்பலம், வைத்தியலிங்கம் என்போர்களையும் ஐயர் அவர்களிடம் கலை பயிற்றுமாறு ஒப்படைத்தனர். மாவிட்டபுரம்திரு. குழந்தைவேலு என்பவரும் ஐயரவர்களிடம் கல்வி கற்றவர்களுள் ஒருவர்.

இவ்வாறு மாணவர்களின் தொகை அதிகரிக்கவே, ஐயரவர்கள், தமது இல்லத்திற்கு அண்மையில் ஒரு சிறு மண்டபத்தைச் சைவப்பெரியார் சிலரின் உதவியுடன் அமைப்பாராயினர். ஐயரவர்கள் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கின்றார் என்பதையும்- மாணவர் தொகை நாளாவட்டத்தில் அதிகரித்துக்கொண்டு வருகின்ற தென்பதையும், பாடஞ் சொல்லிக் கொடுப்பதற்காக ஒரு சிறு மண்டபம் அமைத்திருக்கின்றனர் என்பதையும் அறிந்த கிறீஸ்தவ பாடசாலையார் மிக மனம் புழுங்கினர். அவர்களுடைய மனப் புழுக்கத்தினால் ஐயரவர்கள் சிறிதும் மன வாட்டமுறாதிருந்ததுமன்றிக் கிராமத்திலுள்ள சைவப் பெரியார்களில் அநேகர் ஐயரவர்கள் அமைத்த வித்தியாசாலை நன் கொடை பெறும் பாடசாலையாக அமைதல் வேண்டுமென்னும் எண்ணங் கொண்டவர்களாய் இருந்மையால், அதிக வீரம் படைத்தவர் போல் கிறீஸ்தவ எதிரிகளையெல்லாம் விரட்டவும் ஆரம்பித்தனர். தமது பாடசாலை பதிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப் பெறுதல் வேண்டுமென்றும், அரசினரால் பரீக்ஷை நடத்தப்பெற்று நன்கொடை யளிக்கப் பெறுதல் வேண்டுமென்றும் அரசாட்சியாருக்கு விண்ணப்பஞ் செய்தனர்.

ஐயரவர்கள் அரசாட்சியாருக்கு விண்ணப்பித்த செய்தியை யறிந்த கிறீஸ்தவர்கள் தூண்டிற் புழுவினைப் போல் துடிதுடித்து ஐயரவர்களின் மனுவை அங்கீகரியாது மறுக்கும்படி அநேக எதிர் மனுக்கள் அனுப்பியது மாத்திரமன்றி நேர்முகமாகப் பேசுவதற்குச் சில பிரதிநிதிகளையும் அனுப்பினர். அக்காலப் பிரமாணப்படி இரு பாடசாலைகளுக் கிடைத் தூரம் ஒரு மைலாவது அமைந்திருத்தல் வேண்டும் என்றிருந்தும், கால் மைலுக் குட்பட்ட அண்மையிலுள்ள ஐயரவர்கள் பாடசாலையை அரசினர் அங்கீகரிக்கும்படி செய்தலை அக்காலத்தில் இருந்த சைவப் பெருமக்களின் தொண்டும், ஐயரவர்களின் மனத் தூய்மையுமே யாகும்.

அறிவு, ஆற்றல், தோற்றம், ஆசாரசீலம் அனைத்தும் ஒருங்கமையப்பெற்ற அந்தண குல உத்தம புருஷருக்கு இடம் பொருள் ஏவல் ஆதிய வசதிகளை அளித்தவர், அக்காலத்திருந்த ஒவ்வொரு சைவப் பெரியார்களுமே யாவர். அவர்களுள் தலை சிறந்து விளங்கியவர்கள் திரு. சின்னப்பா மணியம், திரு. காசிநாதர் பொன்னம்பலம் பிரசித்த நொத்தாரிஸ் தெ.ச. துரையப்பா, திரு.காசிப்பிள்ளை-பொன்னையா வழக்கறிஞர் திரு. வ. குமாரசாமி, திரு க. தம்பையா பிரம்மஸ்ரீ. செ. வயித்தியநாதசாமி ஐயர் முதலிய பலராவர்.

அக்காலத்திருந்தது போன்று இக்காலம்வரை ஐயரவர்களால் தாபிக்கப்பெற்ற இப்பாடசாலைக்கு உறுதுணையாய் விளங்கியவர்கள் இக்கிராமத்துச் சைவப் பெருமக்களேயாவர். அவர்கள் தொண்டு எக்காலமும், எவராலும் எவ்விடத்தும் போற்றுதற் குரியதாகும். அவர்களது பாஷாபிமானம் சமயாபிமானம் தேசாபிமானம் தொண்டு என்னும் சிறந்த குணங்கள் அயற்கிராமத்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கிக் கொண்டிருப்பதை யாவரும் நன்கு அறிவர். அன்றியும் இப்பாடசாலையின் வளர்ச்சியே சிறந்த சான்று பகரும் சாசனமாகும்.

ஐயரவர்கள் விடாமுயற்சியினாலும் பெரியோர்களின் ஒத்துழைப்பினாலும் 1900-ல் ஸ்தாபிக்கப் பெற்ற இப்பாடசாலையானது 1901-ல் பதிவுசெய்யப் பெற்று 1902-ம் ஆண்டு வைகாசி மாதத்தில் முதன் முதலாகப் பரீட்சை நடத்தப்பெறக் கூடியதாகவும் இருந்தது. ஆரம்பகாலத்தில் ஐயரவர்களின் தந்தையாராகிய பிரம்மஸ்ரீ கதிர்காமையர் அவர்களே முகாமைக்காரராக விளங்கினர். ஐயரவர்களே தலைமையாசிரியராகக்கடமையாற்றினர். ஐயரவர்கள் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியஐயர், பிரம்மஸ்ரீ து. செல்லையர் திரு செ. ஆறுமுகச்சட்டம்பியார், திரு மாப்பாணிச் சட்டம்பியார் ஆதியோர் உதவியாசிரியர்களாகக் கடமையாற்றினர்.

அரசினராற் பதிவு செய்யப்பெற்ற காலத்தில் ஏறக்குறைய அறுபது மாணவர்கள் வரையில் கல்வி பயின்றனர். நீண்டகாலம்வரை பாடசாலை மண்டபம் மண்சுவரைக் கொண்டதாகவும் சுவரின் உட்புறமாக நாலுபக்கங்களிலும் மாணவர் உட்கார்ந்து படிப்பதன்பொருட்டு மண்திண்ணைகளை யுடையதாகவும் அப்பியாசப்புத்தகங்கள் வைத்து எழுதுவதற்குதவியாகச் சில வாங்குமேசைகளை யுடையதாகவும் இருந்தது. ஆரம்பகாலத்தில் உபயோகத்திலிருந்த சிலமேசைகள் இப்பொழுதும் உபயோகத்திலிருக்கின்றன பாடாசலையில் தானும் கடமையாற்றுவதோடமையாது ஆசிரியர்களும் மாணவர்களும் தவறாது கடமையாற்றும்படியும் உதவிபுரிந்து கொண்டிருக்கும் சுவர்க்கடிகாரம் ஆரம்பகாலத்து வந்து சேர்ந்த பழம் பொருளாகும்.

ஐயரவர்கள் காலத்தில்பாடசாலையைத்தரிசித்து உதவி புரிந்த பெருமக்களுள், பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு அண்ணாமலைப்பிள்ளை சட்டநூலறிஞர் திரு அம்பலவாணர் கனகசபை திரு A. M. சிற்றம்பலம் திரு A. மயில்வாகனம் திரு T. கனகசுந்தரம் பிள்ளை திரு P. S. சரவணமுத்து திரு V. முத்துக்குமாரு திரு ம. இரத்தின மயில்வாகனம் சட்டநூலறிஞர் திரு திருநாவுக்கரசு ஆதியவர்கள் மிகமுக்கியம் வாய்ந்தவராவர். 1918-ம் ஆண்டு ஐயரவர்கள் சிவபதப்பேறெய்தும் வரை தாமே தலைமையாசிரியராக இருந்து நீண்டகாலம் அரிய சேவை புரிந்தனர்.

**வளர்ச்சி**

மாணவர்கள் தொகை அதிகரித்தமையினாலும் பாடசாலைத் தராதரம் மத்திய பாடசாலையாகஉயர்த்தப்பட்டமையாலும் 1918-ம் ஆண்டளவில் முன்னிருந்த கட்டிட வசதிக்குறைவுகாரணமாகப்புதியதோர் மண்டபம் அமைக்கப் பெற்றது. ஆசிரியர் தொகையும் ஆறுபேராக அதிகரித்தது. கல்வித்திட்டமும் திருத்தி அமைக்கப் பெற்றது. விசேடமுறையில் கல்விபூட்டப் பெற்றது. ஐயரவர்கள்தமது கடைசிக் காலத்தில் பாடசாலையின் சகல உரிமைகளையும் ஆசார ஒழுக்க நெறிகளிற் சிறந்தவரும் சுவீகார புத்திரனுமாகிய பிரம்மஸ்ரீ அ. தியாகராசஐயர் அவர்களிடம் ஒப்படைத்தனர். அவர் பாடசாலைப் பொறுப்பைக் கொண்டு நடாத்த இயலாத நிலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் 1921-ம் ஆண்டு பாடசாலையை ஸ்ரீமான் தெ அ. துரையப்பாபிள்ளை அவர்களிடம் கையளித்து விட்டுத் தாம் ஒருஆசிரியராகக் கடமை யாற்றி வந்தனர். புதிய முகாமைக்காரர் அவர்கள் பாடசாலையின் இடவசதிக்குறைவுகளை நன்குணர்ந்து 1925-ம் ஆண்டில் இப்பொழுது பாடசாலை அமைந்திருக்கும் நிலத்தை விலைக்குப் பெற்று 1928-ல் அவ்விடத்தில் கட்டிடங்களை மாற்றி அமைத்துக் கொண்டனர். அக்காலத்தில் இருமண்டபங்களைக் கொண்டதாயும், 1933-ம் ஆண்டு முதல் 1943-ம் ஆண்டுவரை மூன்று மண்டபங்களைக் கொண்டதாயுந் திகழ்ந்தது. 1931-ல் ஆறும் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பெற்று 1942 வரை கனிஷ்டபாடசாலையாக விளங்கியது. அப்பொழுது பிள்ளைகளின் தொகை வர வர அதிகரித்தமையினாலும், சிரேஷ்ட தராதரப் பத்திரவகுப்பு ஆரம்பித்தால் பாடசாலை மேன்மேலும் வளர்ச்சியுறுமென ஆசிரியர்கள் கருதியமையினாலும் 1943-ம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் மேற்படி வகுப்பு ஆரம்பமாயது. சிரேஷ்ட பாடசாலையாக நமது பாடசாலை விளங்க வேண்டுமானால் கட்டிட வசதி போதியளவு இருக்கவேண்டுமென்று நினைந்து இப்பொழுது இருக்கும் பெரிய மண்டபத்திற்கு அஸ்திவாரக் கல்லும் நாட்டப் பெற்றது. 1943-ல் ஆரம்பித்த கட்டிட வேலையானது 1947-ம் ஆண்டளவில் இறைவனருளாலும் ஆசிரியர் பெற்றோர் அபிமானிகள் என்போரது ஒத்துழைப்பினாலும் நிறைவேறியது.

பாலர் பகுதிச் சிறார்களுக்கு தனிப்பட்ட முறையில் சிறந்த சாதனங்களுடன் கூடிய இட அமைப்பு இருத்தல் அவசியம் என வித்தியா பகுதியினரின் விருப்பிற்கியைந்தும் பாடசாலையின் 50 ஆண்டுப் பூர்த்தி விழாக் கொண்டாடுதல் வேண்டுமென அபிமானிகள் கூறியவிருப்பிற்கியைந்தும் ஸ்தாபகராகிய பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்திஐயர் அவர்களின் ஞாபக சின்னமாக ஏதாவதொன்றை நிறுவுதல் வேண்டுமெனப் பொன்விழாச் சபையினர் தீர்மானித்த விருப்பிற்கியைந்தும் 1951-ம் ஆண்டு பெற்றோர் அபிமானிகள் பழைய மாணவர் என்பவர்களுடையபேருதவியினால் பாலர் களரி மண்டபம் சிறந்த முறையில் அமைக்கப் பெற்றது.

பாடசாலையிற் கற்கும் மாணவர்கள் பல்வேறு துறைகளிலும்அறிவைப்பெறவேண்டுமாயின்சிறந்த பத்திரிகைகளை வாசித்தல் அவசியம் எனவும்இருந்து வாசிப்பதற் கேற்ற வாசிக்சாலையொன்று இருத்தல் நலமெனவும் ஆசிரியர்கள் நன்குணர்ந்தனர் இவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்குமேற்படி சபையாரின் பேரில் ஸ்ரீமான் திரு சுந்தரமூர்த்தியாசிரியர் அவர்கள் தமது இடையறாப் பேருக்கத்தினால்பொது நன்மைகளில் அதி விருப்புடைவரும் வண்மையிற் சிறந்தவரும் தனவந்தரும் ஆகிய ஸ்ரீமான் மு. இராமுப்பிள்ளை அவர்களின் அன்பளிப்பினால் நிறைவேற்றி வைத்தமை போற்றற்குரியது. இவ்வாறு நமது பாடசாலை வெறும் கட்டிடங்களான் மாத்திரம் வளர்ச்சியடைந்து கொண்டு போகாது கல்வி சம்பந்தமான விடயங்களிலும் முன்னேற்றம் பெற்று வருவது யாவரும் அறிந்ததாகும்.

### முகாமைக்காரர்

இப்பாடசாலை 1900 ஆண்டு தொடக்கம் பல முகாமைக்காரர்களின் கீழ் இருந்து இக்கிராமத்துக்கு அரிய தொண்டுகள் செய்து வருகிறது. 1900 தொடக்கம் 1905-ம் ஆண்டுவரை ஸ்தாபகர் அவர்களின் தந்தையாராகிய பிரம்மஸ்ரீ ச. கதிர்காமையர் அவர்களும் 1918-ம் ஆண்டுவரை அவரின் கனிஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ க. செல்லையர் அவர்களும் 1919-ம் ஆண்டுவரை பிரம்மஸ்ரீ க. சிவஞானக் குருக்களும் 1980-ம் ஆண்டு பிரம்மஸ்ரீ வே. தியாகராசக் குருக்களும் 1921-ம் ஆண்டு தொடக்கம் 1923-ம் ஆண்டுவரை தெல்லிப்பழை மகாசனக் கல்லூரி ஸ்தாபகரும் அருந்தமிழோடாங்கில கலாசாலைவல்லுநரும் பேராசிரியருமாகிய ஸ்ரீமான் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்களும் 1924-ம் ஆண்டு முதல் ஆண்டுமுதல் 1943-ம் ஆண்டுவரை சட்டநூலறிஞரும் பாடசாலைகளின் சொந்தக்காரரும் முகாமைக்காரருமாக விளங்கிய திருவாளர் கா, அருளம்பலம் அவர்களும், மேற்படி ஆண்டிலிருந்து இன்றுவரை மகாசனக்கல்லூரி அதிபரும் ஸ்ரீமான் துரையப்பாபிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் கலாவல்லுநரும் சற்குணவானுமாகிய ஸ்ரீமான் து, ஜயரத்தினம் அவர்களும் ஆகிய ஏழு முகாமைக்காரரின் மேற்பார்வையின்கீழ் இப்பாடசாலை பண்படுத்தப்பட்டு கல்விப்பயிரைவளர்ந்தோங்கச்செய்து பெறற்கரும் பயனை அளித்துக் கொண்டிருக்கிறது.

### தலைமையாசிரியர்கள்.

பாடசலை ஆரம்பித்த காலத்திலிருந்து 1918-ம் ஆண்டுவரை ஸ்தாபகராகிய பிரம்மஸ்ரீ. க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களே தலைமையாசிரியராகக் கடமை புரிந்தனர். பின்னர் சிறிதுகாலம் பிரம்மஸ்ரீ. க. நடராசையர் அவர்களும், 1919 தொடக்கம் 1922 வரை ஏழாலை வாசர் திரு. S. இராசேந்திரம் அவர்களும், 1926-ம் ஆண்டுவரை வழலாய் வாசர் திரு. V. முத்துலிங்கம் அவர்களும், 1928 தொடக்கம் 1942 வரை கலையறிவு சான்றவரும், பாடசாலை வளர்ச்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகப் பெரிதும் உழைத்தவரும் ஆகிய திரு. சு. பரமசாமி அவர்களும், 1943 தொடக்கம் 1945 வரை இப்பாடசாலைப்புதிய மண்டபத்திற்கு அடிகோலியவரும் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பை முதன்முதலாக ஆரம்பித்தவருமாகிய திரு.க.நாகலிங்கம் அவர்களும், 1945 தொடக்கம் 5-11-48 வரை திரு. அ. பரமசாமி அவர்களும், 5-11-48 தொடக்கம் 9-6-48 வரை பாடசாலை வளர்ச்சியின் பொருட்டு அருஞ்சேவை புரிந்துவரும் ஸ்ரீமான் திரு. சுந்தரமூர்த்தி அவர்களும், 9-6-48 தொடக்கம் 1952 ஜனவரி வரை ஆசிரிய நிர்வாகத் திறமை படைத்தவரும், பாடசாலை வளர்ச்சி ஒன்றிற்கே தமது வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்தவரும் ஆகிய திரு. து. ஐயாத்துரை அவர்களும், 1952 பெப்ருவரி தொடக்கம் இன்றுவரை திரு. செ. சிவசிப்ரமணியம் அவர்களும், தலைமையாசிரியர்களாக விளங்கி வருங்கால மக்களின் உன்னத வாழ்வுக்கு அருஞ்சேவை புரிந்துள்ளனர்.

தலைமை சான்ற இத்தலைமை யாசிரியர்களுக்கு நல்ல அமைச்சர்களைப் போன்று, பிரம்ஸ்ரீ. இ. பாலசுப்பிரமணிய ஐயர், பிரம்மஸ்ரீ. து. செல்லையர், திரு. நெ. ஆறுமுகச் சட்டம்பியார், திரு. சி. செல்லையா திரு. மாப்பாணிச் சட்டம்பியார், பிரம்மஸ்ரீ. அ. தியாகராயையர், திரு. சுந்தரமூர்த்தி, திரு. செ. சிவசுப்பிரமணியம், திரு. த. சுப்பிரமணியம், திரு. நா. ஆறுமுகம், திரு. சி. செல்லத்துரை, திரு. வசந்தகுல சிங்கம், திரு. பொ. கனகரத்தினம், திரு. T. S. மயில்வாகனம், திரு. பொ. கந்தையா, திரு. க. சுப்பிரமணியம், பிரம்மஸ்ரீ. தி. சுந்தரமூர்த்திஐயர், ஸ்ரீமதி. முத்துப்பிள்ளை, திருமதி. செல்லம், திருமதி. செல்லம்மா, திருமதி. இ. பரிமளம், திருமதி. சி. வள்ளியம்மை, திருமதி. சி. மங்களேஸ்வரி, திருமதி. S. பராசக்தி, திருமதி. M. பாலாம்பிகை, ஆதிய பல உதவி ஆசிரியர்கள் தமது ஒத்துழைப்பினல் பாடசாலை மென்மேலும் வளர்ந்தோங்க வேண்டியவகையில் உதவியளித்தும், புத்திமதிகள் கூறியும் வந்திருக்கின்றனர்.

இப்பொழுது இப்பாடசாலையில் ஒன்பது ஆசிரியர்கள் கடமை யாற்றுகின்றனர். அவர்களுள் பயிற்றப்பட்ட ஆறு ஆசிரியர்களும், தராதரப் பத்திரமுடைய மூன்று ஆசிரியர்களும்உளர். இவர்களுள் ஆங்கில தராாதரப் பத்திரமுடையவர் ஒருவர். பாலபண்டித தராதரப் பத்திரமுடையவர் இருவர். சங்கீத தராதரப் பத்திரமுடையவர் இருவர். வரைதல் தராதரப் பத்திர முடையோர் மூவர். சிரமப் பயிற்சித் தராதரப் பத்திரமுடையவர் ஒருவர்.



செல்வன் சி. சிவனையா
கொழும்பு விவேகனந்த சபையாரால் நடாத்தப்பெற்ற அகிலஇலங்கைத் தேவாரப் போட்டியின் முதலாம்பரிசு பெற்றவர்.

## புற வேலைகள்.

நமது பாடசாலை மாணவர்க்ள் பாடசாலைக் கல்வியை மாத்திரம் பெறுவதோடமையாது விசேட திறமைகளையும் பெறவேண்டும் என்னும் பேரவா பெற்றோருக்கு மாத்திரமன்றி ஆசிரியர்களிடத்தும் அமைந்த காரணத்தானே புற வேலைகள் பலவற்றிலும் பங்கு பற்றி வருகின்றனர். 1938-ல் வட இலங்கைக் கல்வி வாரத்தில் நடைபெற்ற பொருட்காட்சியில் பங்குபற்றியும், 1941-ல் பன்னாலை, சேர். கனகசபை வித்தியாசாலையில் நடைபெற்ற சுகாதார வார விழாவிற் பங்கு பற்றியும், 1942-ல் வலி—வடக்கு கைத்தொழிற் பொருட்காட்சியில் பங்குபற்றியும், வலி—வடக்குத் தமிழாசிரியர் சங்கத்தினரால் காலத்துக்குக் காலம் நடத்தப்பெறும் பேச்சுக்கலை, இசைக்கலை, சங்கீதம், விளையாட்டுப் போட்டிகளிற் பங்கு பற்றியும், விசேட பரிசில்களும், தராதரப் பத்திரங்களும் பெற்றுள்ளனர்.

சமய வளர்ச்சியின் பொருட்டு அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையாரால் நடாத்தப் பெற்று வரும், தேவார உபந்நியாசம் போட்டிகளில் 1942-ம் ஆண்டு தொடக்கம் பங்குபற்றி வருவதோடமையாது, விசேட பரிசில்களையும் நமது பாடசாலை மாணவர்கள் பெற்றிருக்கின்றனர். 1946-ல் விவேகானந்த சபையார் நடத்திய தேவாரப் போட்டியில் மேல்வகுப்பு மாணவரொருவர் தங்கப் பதக்கம் பரிசாகப் பெற்றுள்ளமை அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வளர்ச்சி மாணவர் வளர்ச்சி என்பவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு மாசமிருமுறை ஆசிரியர் சங்கமும், மாசம் மும்முறை கல்வி விருத்திச் சங்கமும், மாச மொருமுறை சமய விருத்திச்சங்கமும் தவறாது நடைபெற்று வருகின்றன. மாணவர் சங்கங்களிலேபேச்சு, பாட்டு, நடனம், நடித்தல், தர்க்கம், புராணபடனம் ஆதிய விடயங்களில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பெறுகிறது.

ஸ்தாபகர் அவர்களின் சுவீகார புத்திரனும், அவரது அடிச்சுவடு பற்றிச் சமயாசார ஒழுக்கத்தையே தமது இலட்சியமாகக் கொண்டவரும நெடுங்காலம் ஆசிரியத் தொழிலில் அமைந்திருந்தவருமாகிய பிரம்ம ஸ்ரீ அப்பாக்குட்டி ஐயர் தியாகராசையர் அவர்களால் இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்குமுன் பாடசாலைச் சமயவிருத்திச் சங்கம் ஆரம்பமாயது. இரு ஆண்டுகளில் அவர் பரகதி யடைந்தனர். பின்னர் கலையறிவு ஆசாரங்களில் சிறந்து விளங்கிய வழக்கறிஞர் திரு. க. இ. தம்பி அவர்கள் இச்சங்கத்துக்குப்பேராதரவளித்து வந்தனர்.

தம்பியவர்கள் காலந்தொட்டுஅவரதுசமயப்பற்றுக் காரணமாக அநேகர் சமயப் பிரவேசம் செய்யப் பெற்றனர். அவரும் ஐந்தாவது ஆண்டில் சிவபதப் பேறெய்தினர். அவர் இவ்வுலகை நீத்தமை சைவ உலகிற்கும், தமிழ் உலகிற்கும் ஓர் துரதிர்ஷ்டமாகும். இச்சமய விருத்திச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா 1943-ல் ஸ்ரீ மான் சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையில் மிக விமரிசையாக நடைபெற்றது.

தற்போது பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலையில் சங்கீத ஆசிரியராக விளங்கும் இசைமணி பொ. முத்துக்குமாரு அவர்கள் எமது பாடசாலை மாணவர்கள் சைவத் திருமுறைகளைப் பண்முறை தவறாமல் ஓதுந் திறமையும், சங்கீத அறிவும் பெறும்பொருட்டு 1941-ம் ஆண்டு தொடக்கம் 1950-ம் ஆண்டு வரையும் பெருந் தொண்டாற்றிச் சைவப்பயிரை வளர்த்து வந்தமை என்றும் மறக்க முடியாததாகும்.

மாணவர்களது ஊக்கத்தை விருத்திசெய்வதன் பொருட்டு சுந்தரமூர்த்தி குழுஉ, சின்னப்பா குழுஉ, தம்பி குழுஉ என மூன்று குழுஉக்களாக மாணவர் வகுக்கப் பெற்றுள்ளனர். இக்குழுவினருக்கிடையில் பல போட்டிகள் நடத்தப் பெற்று வருகின்றன. நால்வர் குருபூசை, நாவலர் குருபூசை, நவராத்திரி பூசை என்பன ஆண்டு தோறும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவைகள் சார்பாகப் பல பெரியார்களைக் கொண்டு சொற்பொழிவுகள் செய்விக்கப் பெற்று மாணவரின் சமயப்பற்றை வளர்த்து வருகினறோம். மாணவர்களுக்குச் சேமிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வதற்காகச் சேமிப்புப் போட்டியை உண்டாக்கி அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றோம்.

அரசாங்கத்தினரின் நன் கொடையைக் கொண்டு மாணவர்களுக்குத் திருப்தியாக உணவு அளிக்கப்பட்டு வருகின்றது. இதன் பொருட்டு இடையிடையே சில பெற்றார்கள் முன்வந்து வேண்டிய உதவியளித்து வருகின்றனர். மாணவரது உடல் வளர்ச்சிக்கேற்ற பல வசதிகள் இருந்தும், விளையாட்டுக்குரிய நிலவசதியில்லாமை இப்பாடசாலைக்கோர் பெருங்குறையாகஇருக்கின்றது.

இவ்வித்தியாசாலை தெல்லிப்பழையில் சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்க்கும் மிகச் சிறந்த ஸ்தாபனமாக இருக்கின்றது. ஆகையால் எங்கள் கிராமம் சமயவளர்ச்சியிலும் தமிழ்க் கலையிலும் மிக முன்னேற்றம் அடைய வேண்டுமாயின் பெற்றார்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். இப்பாடசாலை எத்தனையோ பல்லாண்டுகளுக்கு நிலைபெற்று எத்தனையோ சந்ததிகளுக்குப் பயனளிக்க வேண்டிய ஸ்தாபன மென்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

இக்கலைக் கழகம் இக்கிராமத்துக்கும் இதைச் சூழ்ந்த அயற்கிராமங்களுக்கும் கல்வித்துறை சமயத்துறைகளில் அரும்பணியாற்றி முன்மாதிரியாக விளங்க எல்லாம் வல்ல இறைவன் இணையடி பரவிப் பாடசாலையின் ஐம்பதாண்டு வளர்ச்சி வரலாற்றைப் பூர்த்தி செய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கண்ணோட்டத்தில்.........................

## முகாமையாளர் திரு தெ, து. ஐயரத்தினம் அவர்கள் B. A.

நம் முன்னோர்கள் வாழ்வியலை அறிவியல் அரசியல் பொருளியல் தொழிலியல் என நான்கு பெரிய வகுப்புகளாக வகுத்தார்கள். அதில் தலையாயது அறிவியலாகும். அறிவு கல்வியால் வளர்ச்சி பெறுவது. ஆகவே அறிவை எண்ணும் பொழுதெல்லாம் கல்வியைப்பற்றியே நாம் முதல் எண்ணுகிறோம.

"வீடு தோறும் கலையின் விளக்கம்"
வீதி தோறும் இரண்டொருபள்ளி"

என்று பாரதியார் பாடியவாறு முதற்கண் இக் கல்வி வீடுகளில் வளர்ந்தது. பின் அந்தணர் வீதி, வேளாளர் வீதி என்று இவ் வீதிக் கொரு பள்ளி விதித்து அதில் வளர்ந்தது. அதன்பின் வீதியின் விதிமுறை போய் நகர்களெங்கும் பலபல பள்ளி எனக் கல்வி அனைவருக்கும் உரியதாய்ப்பொதுமை நிலைபெற்றது.

இத்தகு பொதுமை உலகிலே பிறந்தவர் பிரம்ம ஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயரவர்கள். ஐயரவர்கள் அறிவியல்வகுப்பில் அமைந்தவர்களாதலால்கல்விக்கண்படைத்தவராய்விளங்கினர் அக்கல்வி "வாலறிவன் நற்றாள் தொழும்" பேற்றில் அமைய வேண்டும் என நோக்கால் "சைவசமயமேசமயம்" என்ற முனைப்பில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் நாட்டினர். அன்று அவர் செய்த உதவி இன்றும் உருப்பெற்று உலவுகின்றது.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

என்றபடி விண்மண் இரண்டும் கொடுத்தாலும் அவை ஐயரவர்களின் உதவிக்கு ஈடு ஆகா. இத்தகு உதவியின் உருவாக விளங்கும் இப்பாடசாலை சென்ற 52 ஆண்டு காலத்தினுள் கண்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் பற்றி இம் மலரிற் பிறிதோரிடத்திற் காணலாம். ஆகவே அவற்றை இங்கு கூறாது விடுகின்றேன்.

1945-ம் ஆண்டில் புதிய மண்டபம் நிறுவிய காலத்தும் இப்போது நடைபெறும் பொன்விழாக் கொண்டாட்டத்தின்போதும் இவ்வூர்ப் பெருமக்களும், பழையமாணவர்களும் எமக்களித்த ஊக்கமும் உதவியும் மிகப்பாராட்டப்படத் தக்கவை. அவர்கள் எல்லோருக்கும் எமது நன்றி உரியதாகும். காலத்துக்குக் காலம் இங்கு கடமையாற்றிய தலைமையாசிரியர்களும் உதவியாசிரியர்களும் பாடசாலையின தற்போதைய உன்னத நிலைக்கு முக்கிய காரணராயிருந்தன ரென்றால் அது வெற்றுரையாகாது. பெற்றோர்களின் அன்பையும் அபிமானத்தையுங் கவரக்கூடிய நல்ல வேலையைப் பாடசாலையில் செய்தது மன்றி வளர்ச்சிக்காய கடமைகளிலெல்லாம் ஊக்கமெடுத்து மனச் சோர்வு படாமல் உழைத்து வந்திருக்கிறார்கள். அவர்கள் ஊக்கம் மென்மேலும வளர்ந்து பாடசாலையின் விருத்திகருச் சாதனமாய் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

பொன்விழாக் கொண்டாட்டம சம்பந்தமாய் எமக்கு உறுதுணையாய் இருந்த பொன்விழாக்காரிய சபைகரும் அதின் காரியஸ்தர்களி லொருவராய்க் கடமையாற்றிய திரு. ந. சின்னத்தம்பு அவர்களுக்கும் நாம் மிக மிக நன்றி பாராட்டவேண்டும். அவர்களின் சலியாத உழைப்புக்குப்பாடசாலை என்றும் கடமைப்பாடுடையது.

1943-ம் ஆண்டில் நான் முகாமைக்காரனாய் வந்த பின்பு பாடசாலை பலதுறைகளிலும் தீவிர முன்னேற்றம் அடைந்து வருவது. எனது அதிஷ்டமே. நான் கடமையை யேற்றபோது தலைமையாசிரியராய் இருந்தவர் திரு. அ. பரமசாமி அவர்களாவர். பாடசாலையைத் தமது தவக் குழந்தை போலப் பேணிய பெருமையும் அதற்கு அவசியம் வேண்டற்பாலதாயமண்டபமொன்றைக்கட்டுவித்த புகழும் அவரைச் சாரவேண்டியன. அவர் பள்ளிக்கூடப் பிள்ளைகளிடத்துக் காட்டிய ஆதரவும் பாடசாலை அபிவிருத்தியில் எடுத்துக் கொண்ட சிரத்தையும் பாராட்டுதற்குரியன. எதிர்க்க வேண்டிய இடங்களில் வீராவேசம் காட்டியும் பணிய வேண்டிய சந்தர்ப்பங்களில் சாத்வீகத்தைக் கடைப்பிடித்தும் தமது கடமைகளைச் செவ்வனே செய்யும் கெட்டித்தனம் அவர்களிடத்து நிரம்ப இருந்தது. அதற்குப்பின் தலைமையாசிரியராய் வந்த திரு. து ஐயாத்துரை அவர்களுக்கும் பாடசாலைக்கு முணடாய தொடர்பு தலைவனுக்கும் தலைவிக்கு மிடையே உள்ள தொடர்பு போன்றது. முதன் முதல் தம் பதவியேற்ற நாளே அவர் பாடசாலையில் கொண்ட காதல் நாளடைவில் வளர்ச்சியடைவதாயிற்று. பாடசாலையின் உள் வேலைகளிலும் புறவேலைகளிலும் அதிகமூக்க மெடுத்ததின் விளைவாகத் தற்போது எமது வித்தியாசாலை இப்பகுதியிலுள்ள உயர்தரத் தமிழ்ப் பாடசாலைகளி லொன்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து மதிக்கப்படுகின்றது. அவர் கொழும்பு ஆசிரிய கலாசாலைக்குக் கல்வி பயிலப் போகும் வரை பொன்விழாச் சபைத் தனுதிகாரியாக மிக வுஞ் சிரத்தை யெடுத்து உழைத்து வந்தார்.

இடைக்காலத்தில் சில மாதங்கள் பதில் தலைமையாசிரியராயும் கடந்த 20 வருஷங்களாய் உதவியாசிரியராயும் கடமையாற்றிய திரு. தி. சுந்தரமூர்த்தி அவர்கள் பாடசாலைக்கு அச்சாணி போன்று முக்கிய தொண்டினைப் புரிந்து வருகின்றார். இவர்பாடசாலைச் சேமிப்பு இயக்க சம்பந்தமான போட்டியில் இருமுறை எமது பாடசாலை முதலிடம் பெறுவதற்குக் காரணமாய் இருந்தது மன்றிப் பொன்விழாச் சபைக் காரியஸ்தர்களி லொருவராயிருந்து வைபவங்களனைத்தையும் சிறப்பாக நடைபெறச் செய்வதற்கு ஏதுவாயுமிருக்கின்றார். தற்போதைய பதில் தலைமையாசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் கடமையினின்றும் பிறழாமையே தமது லட்சியமாககொண்டு பாடசாலை உயர்ச்சியில் கண்ணும் கருத்துமாய்த் தொண்டுபுரிந்து நிற்கின்றார். இவர் பொன் விழாச் சபைத் தனுதிகாரியாய்ப் பணஞ் சேர்க்குந்தொண்டில் ஊக்கங் காட்டியும் பொன்விழாக் கொண்டாட்டத்தில் முக்கிய பங்கு எடுத்துமுள்ளார். நிற்க,

ஆங்கிலக் கல்வியே அரசாங்க உத்தியோகத்துக்குத திறவு கோலாயிருந்த தன்மையால் பல ஆண்டுகளாகத் தமிழ்ப் பாடசாலைகளில உயர்தரக் கல்வி பயில்வதற்குப் பெரும்பாலான மாணவர்கள் விரும்பவில்லை. கூடுமானல் காணியை விற்றோ இனத்தவர்களுக்குக் கடமைப்பட்டோ ஆங்கிலக் கல்லூரிகளுக்குச் சென்று பணம் செலவழித்துப் பயின்று மாதவருவாய் தரக்கூடிய உஸ்தியோகத்தைப் பெறமுயன்றார்கள். இதில் அநேகர் அனுகூலமுமடைந்தார்கள். தமிழ்ப் பள்ளிககூடங்களில உயர்தர வகுப்புகளில பயினற மாணவர்கள் தமிழாசிரியராய் வருவதற்கு மாத்திரம் அருகதையுடையவர்களாய் இருந்தார்கள். வேறு ஒருவித உத்தியோகத்துக்கும் அவர் ளுக்கு வழி திறககப் படாமையால் பெரும்பால னர் தமிழ்ப் பள்ளிக் கூடங்களை வெறுதது ஒதுககி வந்தார்கள். ஆனல் இன்றைய நிலை முழுவதும் மாற்றமடைந்து விட்டது. தேசியபாஷைகளாகிய சிங்களமும் தமிழும் அரசாங்க பாஷைகளாக வேண்டு மென்ற திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் படிப்படியாக அமுலுக்கு வருவது எவரும் அறிந்ததே. அதன் பயனக தமிழில் உயர்தரக்கல்வி பயின்ற எத்தனையோ சிறுர் அண்மையில் அரசாங்கசேவையில் இலிகிதர்களாகவும் வேறு அலுவலாளர்களாகவும் உத்தியோகம் பெற்றிருக்கின்றனர். அரசாங்க சேவைதான் சிறந்தது. ஆகையால் அதில் இடம் கிடைத்திருப்பது தமிழ்த் தராதரப் பத்திரம் உள்ளவர்களுக்கு வரப்பிரசாத மென்று நான் சிறிதேனும் கருதவில்லை. அது தற்காலப்போக்கிற்கு முழுவதும் முரணனது. ஆனல் தமிழ் உயர்தரக்கல்விக்குக் கண்ணியம் வந்து விட்டது. தமிழ்ப் பாடசாலைகள் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டகாலம் மலை யேறி விட்டது என்பதே எனது கருத்து. அதுமாத்திர மன்றி எமதுதாய் மொழியாகிய தமிழ் தான் எமது கல்வியின் போதனை மொழியாகவும் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் மூன்று ஆண்டுகளில் எட்டாம் வகுப்பு வரை எந்தப் பள்ளிக்கூடத்திலும் தாய்ப் பாஷையிலேயே கல்வி பயிற்றப்படும். அதற்கு மேல் உயர்தரக் கல்வி முழுவதும் தாய்ப் பாஷையில் பயிற்ற வேண்டிவரினும் வரும். அப்படி வந்துவிட்டால் ஆங்கில பாடசாலைகளுக்கும் தமிழ் பாடசாலைகளுக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கப் படுமென்பது எனது துணிபு. இந்த நிலையில் தமிழ்ப் பாடசாலைகளுக்கு எதிர்காலத்தில் முக்கிய இடமுண்டு. பாரெங்கும் புகழ் வீசிய தமிழ் தனது தேமதுர ஓசையால் புதிய முறையில் பரவுமென்று எண்ணும் பொழுது என் உள்ளம் பூரிக்கின்றது.

இனிக் கல்வி முறையில் இன்னெரு விசேஷமானமாற்றம் ஏற்பட விருக்கிறது. இதுகாறும் புத்தகப் படிப்பே பிரதான மென்ற நம்பிக்கை பொதுவாக எமமக்கள் யாவரிடத்தும் சிறப்பாக மாணவர்களிடத்துங் காணப்பட்டது கைத் தொழில், கமத்தொழிலாதியாங் துறைகளில் உழைத்து அவற்றின் வழி வருவாயைத் தேடுவது இழுக்கென்ற மனப்பானமையும் எமமவர்களிடையே நிலவி வந்தது. எங்கள் தேசத்துக்கும சமுதாயத்துக்கும் பொருளுற்பத்தியே மிக அவசியமானது. பொருளுற்பத்தியின்றேல் நாட்டின பொருளாதாரநிலை மேன்மேலுங் கேவல நிலை யடைவது திண்ணம். அதுவுமலலாமல் நம் வாலிபர்களெல்லாரும் உத்தியோகத்தை நாடினல் உத்தியோகம் கிடைப்பதும் அபூர்வமாயிருக்கும். ஆகையால் மாணவர்கள் தொழிற் கல்வி பயில வேணடியது வெளிப்படையாகிறது. அதுவுமன்றிக் கல்வி தொழில் மூலம் பயின்றூற்றான் சிறக்குமெனபது கல்வி ஆராய்ச்சியாளரின் துணிபாகும். மகாத்மா காந்தியடிகளும் அவ்வழியையே "வார்தாதிட்டம்" மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுக்குக் காட்டிச் சென்றனர். ஆகவே தொழிற் கல்விக் கேற்ற வசதிகள் ஒவ்வொரு பாடசாலையிலும் ஏற்படுத்த வேண்டு மென்பது தெளிவாகிறது. எமது பள்ளிக்கூடத்திலும் அதற்குரிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய அவசியம் வந்திருக்கிறது. இம்மட்டோடமையாது மாணவர் விளையாடுவதற்கும் தோட்டவேலை செய்வதற்கும் நிலம் அத்தியாவசியமா யிருக்கிறது. இவற்றை யெல்லாம் அபிமானிகள் ஞாபகத்தில் வைத்திருத்தல் நலனாகும். இதற்கு வழிகாட்டியாக தெல்லிப் பழையில் பெரிய தனவந்தரும் கொடை வள்ளலு மாகிய திரு. மு. இராமுப்பிள்ளை யவர்கள் வாசிக சாலை யொன்றைப் பாடசாலைக்கு மனமுவந்து உதவிய பெருமையைப் பாராட்ட வேண்டியவர்களாகிறோம். கொடுக்கும் மனப் பான்மை யுள்ளவர்களிடத்துப் பொருளின்மையும், பொருளுள்ளவர்கள் மாட்டுக் கொடுக்குந்தன்மை யிலாமையும் சகஜமாகக் காணப்படுகின்றது. ஆனால் திரு. இராமுப்பிள்ளை யவர்களிடத்து பொருளுடைமையும் தானஞ்செய்வதில் அவாவும் ஒருங்கு பொருந்தி யிருப்பது எங்கள் பாக்கியமே. அவர்களின் முன் மாதிரியை மற்றையோர் பின்பற்றினால் எம்வித்தியாசாலை ஓங்கிவளரு மென்பது சொல்ல வேண்டியதில்லை. எம்மவரனைவருக்குஞ் சொந்தமாய் எம் மக்கள் யாவருக்கும் அன்னையாய் மிளிர்கின்ற இந்த ஸ்தாபனம் மேன் மேலும் வளர்ந்து குன்றின் மேலிட்ட தீபம் போல் பிரகாசிக்க வேண்டு மென்பதே எமது பேரவாவும் பிரார்த்தனையுமாம்.

"சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையகமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள"



ஷை வித்தியாசாலைக்கு அன்பளிப்பாக
வாசிகசாலைக் கட்டிடத்தை உதவிய தனவானும் அபிமானியுமாகிய
திரு. **மு. இராமுப்பிள்ளை** அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதற்கென்ன சொல்வீர்?

சைவமரபு தழைக்கவேண்டும். சிவத்தியானம்வேண்டும். தமிழ்ப் பண்பாடு இளமையிலேயே இரத்தத்தோடு பாயவேண்டும். இவ்வாறு கூக்குரலிட்டு ஐம்பது ஆண்டுகளுக்குமுன்னர் என்னைத் தோற்றுவித்தீர்கள். ஐயர் அவர்களையும் செவிலித்தாயாக ஏற்படுத்தினீர்கள். உங்கள் பெற்றோர்களின் பேராதரவினாலும் ஐயர் அவர்களின் விடாமுயற்சியினாலும் யான் வளர்பிறை போல வளர்ந்து முழு மதியாய்த் தோற்றமளிக்கின்றேன்.

பழையன கழிக்கிறார்கள். புதியன புகுத்துகிறார்கள். இது உலகப்போக்கு. இது குற்றமல்ல. இது நிறைவின் அங்கமேயாகும். திண்ணையிலே தடுக்கில் கிடந்து மழலை பேசினேன். சிறிது வளர்ச்சியடைந்தபின் சிறு கொட்டகை ஒன்று கட்டி என்னை விளையாடவிட்டீர்கள். யானும் ஆனந்தப்பட்டேன். உங்கள் பெற்றோர்களிற் பலரும் என்னை ஆதரித்தார்கள். காலத்துக்குக்காலம் குடும்பம் பெருகப்பெருக எனது இல்லிடத்தை நீட்டியும் பெருக்கியும் எனக்கு ஆதரவளித்து வந்தீர்கள். ஆகா! என்ன சந்தோஷம். நாகரீகப்பித்து எவரைத்தான் தப்ப விட்டது. நீங்களும்தானே தெருக்கரையை நாடி மாளிகைகள் கட்ட ஆரம்பித்துவிட்டீர்கள். யானும் உங்கள் பெற்றோர்களின் பாதுகாப்பிலுள்ள பிள்ளைதானே. உங்களுக்குள்ள ஆசை எனக்குமுண்டு. தெருவோரத்துக்கு வராது போனாலும் தெருவை நோக்கி, வந்தேன். என்னை வளர்த்தவருடைய இயல்புக்கேற்ப மண்ணாலும் கல்லாலும் வீடு கட்டி இவ்விடத்திலேயே வளர்ந்துவந்தேன். ஆசையும் தேவையும் பெருகப்பெருக நீங்கள் எனக்குப் பரந்த இல்லிடத்தைத் தேடித்தரவேண்டியவரானீர்கள். தேடியும் தந்தீர்கள்.

என் பொறுப்பை ஐயரிடம் கொடுத்தீர்கள். குழந்தைப் பருவத்தில் என்னைப் பராமரிக்கவும் என் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் ஐயாவுக்கு இலேசான காரியமாயிருந்தது. ஆனால் காலகதியில் என் வளர்ச்சி வேகம் கூடியதால் என்னுடைய தேவைகளைப் பூர்த்திசெய்ய ஐயாவுக்கோ அல்லது அவரின் உரிமையாளருக்கோ கஷ்டமாகவிருந்தது. நான் உங்களுடைய நினைவின்பாற் பட்டேனேயல்லாமல் அவர்களின் கஷ்டநிலையை கொஞ்சமேனும் பொருட்படுத்தவில்லை. இதில் என்ன குற்றம் பெண் உள்ளம்தானே! ஐயாவிடமிருந்து விலகியேனும் உங்களோடு ஒருவராய், உங்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்பவளாய், இருக்க சித்தமானேன். எனது விருப்பத்திற்கேற்ப துரையப்பாவள்ளல் என்னைக் காதலித்தார். யானும் அவர்பால் அன்புகொண்டேன். நான் யார்? எனது தேவையென்ன? யான் எவ்வாறு அமையவேண்டும்? என்னும் இன்னோரன்ன முறைகளை ஒருசேர உணர்ந்த பண்பாடுள்ள உத்தம நாயகர் என்னை தளரவிடாமல் தட்டிக்கொடுத்து வளர்த்து வந்தார். எல்லாம் சுபமாகவே நிறைவேறி வந்தன. யானும் அழியாவரம் பெற்ற தெய்வமானேன்.

பிறப்புற்றோர் இறப்படைவார் என்றெல்லாம் சித்தாந்தம் நுண்பொருள் கூறும். இதன் உண்மையை நீங்களும் அறிந்துகொண்டிருக்கிறீர்கள். எனக்குத் தெய்வத் தன்மையையும் இறவா நிலையையும் தந்த நாயகர் என்னை விட்டுப்பிரிந்தார் யானும் கவலைப்பட்டேன். ஆனால் நீங்கள் அடைந்த துன்பமோ உரைக்க முடியாது. இந்நிலையில் சில ஆண்டுகள் கழிந்தன. எங்களது கவலையை நீக்க, வழிமுறை தவறாத உத்தமனார் திருவாளர் ஜெயரத்தினம் அவர்கள் என்னைப் பராமரிக்க முன்வந்தார். பரந்த கல்வியறிவு பெற்று சிறந்த பண்பாளராக விளங்குகின்ற அவர் என்னுடைய தேவைகளையும் உங்களுடைய தேவைகளையும் ஒருங்கே வைத்து அலசி ஆராய்ந்து வேண்டியன வேண்டியாங்கு நிறைவேற்றித் தருகின்றார். நான் செய்த பாக்கியம்தான் என்னே!

என்னுடைய வளர்ச்சியையும் என்னுடைய தோற்றத்தையும் கண்டு ஆனந்திப்பவர்களும் அனுபவிக்கின்றவர்களும் நீங்கள்தானே. அதனால் நீங்கள் காலத்துக்குக் காலம் என்பேரில் செய்துகொண்ட அன்புச் செயல்களையும் அருந்தொண்டுகளையும் என்னால் மறக்கமுடியாது. என்னை நிலையுள்ள பொருளாக்கி உங்களுக்கு உதவியது போல உங்கள் சந்ததிக்குமே நின்று உதவக்கூடியதாக ஆவனசெய்து வருகின்றீர்கள். ஆம் உங்கள் நினைவு நியாயமானது. உங்கள் பிற் சந்ததி சிறந்து விளங்கும்படியாக என்னால் அவர்களை வளர்க்கமுடியும். உங்கள் ஏகோபித்த குரலில் எழுந்த வல்லமைதான் இது.

உங்களை நினைக்கவும் எனக்கு ஆதரவளிக்கவும் நினைந்து இன்று நீர் பொன்விழாக் கொண்டாடுகின்றீர். வயது 50 ஆனால் நான் இளமை கொண்டாடுகின்றேன். யான்தானே தெய்வத்தன்மை அடைந்துவிட்டேன். ஆதலில் வயது ஐம்பது என்றும் முதுமை வந்துவிடுமே என்றும் பயப்படவேண்டாம். இந்த இளமை நிலையானது. உங்கள் நல்லாசிகளினாலே மேலும் இந்நிலை ஸ்திரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை

உங்களுக்காகவே யான் நிலைத்திருக்கின்றேன். உங்களுக்கு எது எது தேவையோ அவற்றையெல்லாம் உரிய காலத்திலே என் மூலமாகப் பெற்றுக்கொண்டீர்கள். சைவமணம் வேண்டுமென்றீர்கள். கோவிலுக்குள் கோவில் கட்டி சமயாசாரப்படி பூசை செய்து மாணவருக்குச் சமய உணர்ச்சியைக் கொடுக்கிறேன். சைவப் பெரியார்களின் ஒழுக்கநெறியும் பண்பாடும்வேண்டுமென்கிறீர்கள். நாயனுர் குருபூசைகளும் சரஸ்வதி பூசையும் முறைப்படி செய்வதோடு தேவார திருவாசகங்களும் முறைப்படி கேட்கவும், ஓதவும் வசதி செய்துளேன். நாளுக்குநாள் பிள்ளைகளின் தொகை கூடிக்கொண்டு வருகிறது. பிள்ளைகளை அனுப்புகின்ற உங்களுக்கு இது விளங்குந்தானே. இடம் போதாதென்று மனம்நோகின்ற நேரத்திலே நீங்கள் முன்வந்து இரண்டு பெரிய அறைகள் கட்டித்தந்தீர்கள். எனது காவலன் அதற்கு வேண்டிய உபகரணங்களைத் தந்தார். இன்று உங்கள் பிற் சந்ததியார் அவ்விரு அறைகளிலும கூடி ஒரு புது உலகத்தைச் சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறுர்கள். எல்லோரும் வாருங்கள். அவர்களது கற்பனை உலகைக்கண்டு ஆனந்தியுங்கள். சிறு பிள்ளைகளானுலும் நிறைய அறியவேண்டும். வாசிக்க வேண்டும். பெரியோர்களுடைய அறிவைப் பெறவேண்டும். வெளி உலகத்தோடு தொடர்பு வைக்கவேண்டும். இவற்றைப் பெறுவதற்கு ஒரு வாசிகசாலை, நூல்நிலையம் என்பன இன்றியமையாதன என்றெல்லாம் பேசிக்கொள்ளுகிறீர்கள். ஆம் இது உண்மைதான். இத்தேவையை யான் சில ஆண்டுகளுக்கு முன்னரே உணர்ந்தேன். யாரைக் கேட்கலாம என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தேன். என்னுடைய இந்நிலையை அறிந்தோ, அல்லது முற்பிறப்புத் தொடர்பினுலேயோ திருவாளர் மு. இராமுப்பிள்ளை அவர்கள் முன்வந்து எங்களுக்கு ஒரு வாசிகசாலையைத் தந்துதவினுர். அவர் காலத்தினுல் செய்த கொடைத் திறமையை எம்மால் போற்ருதிருக்க முடியாது. வாழ்க திரு. மு. இராமுப்பிள்ளை அவர்கள். இந்த வாசிகசாலையை நிலையான தலமாக்கி பொலிவுறச் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. அதனைச் செய்ய ஒருவர் முன்வரவேண்டுமென்று உண்மையாக சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். ஆதலின் ஒரு பேரன்பர் இத்தொண்டு செய்ய முன்வருவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. முன்னாடியே அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நிலையான ஒரு ஸ்தாபனமாக என்னை ஆக்கிவிட்டீர்கள். உங்களுடைய நினைவிலும் பார்க்க நினைவுக்கு அப்பாற்பட்ட வேகத்திலே யான் வளர்ந்துகொண்டு வருகின்றேன். உங்கள் சந்ததியின் பிற்கால சேமத்தில் நீங்கள் கரிசனை உள்ளவர்களானுல் என்னுடைய வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும். எது எது வேண்டுமென்பதை நீங்கள் உணராதபட்சத்தில் யான் உங்களுக்கு உணர்த்துகின்ற கடமைப்பாடுடையேன். என்னுடைய மனத்திலே ஒரு கவலை இருக்கின்றது. அதைக் கூசாது தெரிவிக்கின்றேன். உங்களுடைய பிள்ளைகளை நினைத்துத்தான் இதைச் சொல்லுகின்றேன். விசாலமான கட்டிடம் உண்டு. மனவளர்ச்சிக்கு வேண்டிய சாதனங்கள் நிறைய உண்டு. ஆனுல் சிறு பிள்ளைகள் ஆடி ஓடித்திரிந்து நல்ல காற்றைச் சுவாசித்து உடலை வளர்ப்பதற்கு ஒரு விளையாட்டிடம் இல்லை. இது எவ்வளவு இன்றியமையாதென்பதை நீங்கள் எல்லோரும் நன்கு உணர்வீர்கள். ஆதலின் அதனை மீண்டும் வற்புறுத்தாமல் ஒரு விளையாட்டு மைதானத்தை தேடிக்கொடுப்பதற்கு நீங்கள் தனித்தும் ஒருமித்தும் முன்வருவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

உள்ளதைக் கொடுத்தோம். இன்னும் கொடுப்போம். ஆனுல் மீண்டும் மீண்டும், வேண்டும், வேண்டும் என்று கேட்கின்றீரே! ஆசைப் பித்து ஏறிவிட்டதா என்றெல்லாம் நினையாதிர்கள். என்னை அலங்கரிக்க யான் ஒன்றும் கேட்கவில்லை. நான் ஆசையினுல் கேட்கவில்லை. உங்கள் பிள்ளைகளின், இந்த நாட்டின் பிற்கால சந்ததியாரின் ஸ்திரமான நிலைபேற்றை நினைத்தே இவ்வாறு எனது சரித்திரத்தை ஞாபகப்படுத்தி தேவைகளையும் ஒருவாறு கூறினேன். உங்களை நினைந்து உங்கள் சந்ததியை நினைந்து உங்கள் நாட்டின் முன்னேற்றத்தை நினைந்து தமிழை நினைந்து சைவ மரபை வழிப்படுத்த நினைந்து இவ்வாறு கூறினேன். இவற்றின்பேரில் அபிமானம்கொண்டு ஆதரிப்பீர்களென்று ஆவலோடிருக்கின்றேன்.

**சுபம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமையாசிரியர் குறிப்புகள்.

இவ் வித்தியாசாலை ஸ்தாபிதமாகி, ஐம்பது ஆண்டுகள் நிறைவுற்றுப், பொன்விழாக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில், தலைமையாசிரியர் குறிப்பாகப் பின்வரும் விஷயங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

இக் கிராமத்தில், சைவப் பிள்ளைகளுக்குத் தமிழ் பயிற்றுந் தனிஸ்தாபனமாக, இவ் வித்தியாசாலை சென்ற 50 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருகிறதென்பதை, முதற்கண் ஞாபகப்படுத்துகின்றேன். ஆண் பெண்ணாகிய இருபாலாருமாக 260 மாணவர்கள், இன்று இவ் வித்தியாசாலையில், பாலர் வகுப்புத் தொடக்கம் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு ஈறாகக், கல்வி பயின்று வருகின்றனர். பெருந்தொகையான மாணவர்கள், பிரதம வகுப்புக்களிலேயே இருக்கின்றனர். இக் காரணத்தினால் இவ் வித்தியாசாலையிலே பிரதம வகுப்புகளுக்கு, அடிப்படைக் கல்வி போதிப்பதில், நாம் விசேஷ கவனஞ் செலுத்தி வருகின்றோம். சமயக் கல்வியும், சமூகப் பழக்க வழக்கங்களும் விசேட கவனத்தோடு ஊட்டப்படுகின்றனவென்பதைக் கூற விரும்புகின்றேன்.

"தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற மூதுரையை உணர்ந்து. மாணவர்களைப் பூரணப்படுத்து முகமாக, அவர்களின் வளர்ச்சிக்குரிய எல்லாத் துறைகளுக்கும், எங்களால் இயன்ற வரையில், வித்திட்டு வருகின்றோம்.

வயது ஐம்பதெனினும், பிந்திய நாலைந்து ஆண்டுகளிலேயே, பாடசாலை வளர்ச்சி, மிகவுன்னத நிலையை அடைந்திருக்கின்றது. இக்காலத்தில் மாணவர் தொகை கூடினமையினாலே, இரு ஆசிரியர்களைச் சேர்த்து, இன்று 9 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். இவருள் ஆறுபேர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். மூவர் ஆசிரிய தராதரப் பத்திரமும், இருவர் பாலபண்டித தராதரப் பத்திரமும், ஒருவர் தேகப் பயிற்சித் தராதரப் பத்திரமும் பெற்றுத், தங்கள் தகைமைகளைக் கூட்டியுள்ளனர்.

சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்புப் பரீட்சைகளில் இக்காலத்தில் விசேட தேர்ச்சி காணப்பட்டமையினாலே இவ் வித்தியாசாலைக்குப் பெரும் புகழ் ஏற்பட்டது. இன்னும் சுற்றுடலில் உள்ள பாடசாலைகளில் இவ் வகுப்புக்கள் நடாத்தப்படாமையால் இவ் வகுப்பில் அநேக மாணவர்கள் சேரலாயினர். அயற்கிராமங்களிலிருந்தும் பல மாணவர்கள் வந்து சேர்ந்தனர். அதனால் தளபாடங்கள் மேலதிகமாகத் தேவைப்பட்டன. வகுப்பொழுங்கு விசேடமாகச் செய்யவேண்டி ஏற்பட்டது. முகாமைக்காரரது தளரா ஊக்கத்தினாலே, தேவைகளைப் பூர்த்தியாக்கி இன்று சீரிய முறையில் இவ் வகுப்பு நடைபெறுகிறது. புதிய முறையில் நடாத்தவிருக்கும் இவ்வகுப்புப் பரீட்சைக்குப் பதினான்கு மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். சிறந்த பெறுபேற்றை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்களிற் பெரும்பாலோர் பெண்களாவர். அவர்களுடைய பிற்கால வாழ்க்கையையுத்தேசித்து, வித்தியாபகுதியாரின் திட்டத்துக்கமைய, மனையியற்பாடத்தைத் திறம்படக் கற்பித்து வருகிறோம். தகைமை பெற்ற இரு ஆசிரியர்கள், ஷெ பாடத்தைக் கற்பிக்கின்றனர். இப்பாடத்திற்கு வேண்டிய நோயாளரைப் பராபரிக்கும் அறை, சமையல் அறை, மற்றுந் தளபாடங்கள் யாவும் மிகுந்த பொருட்செலவில் தேடியுள்ளோம். இவைகாரணமாக மேல் வகுப்புகளில் இப்பாடத்தைப், பரீட்சைக்குரிய பாடமாக எடுப்பதற்குரிய அங்கிகாரம் பெற்றுள்ளோம். அரசாங்கத்தின் நன்கொடை பெறுவதற்குந் தகைமை பெற்றிருப்பதனாலே அதற்குரிய விண்ணப்பமும் செய்துள்ளோம். அவ்வங்கீகாரம் விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம். பெண்களது வாழ்க்கைக்கு, மனையியலறிவு இன்றியமையாததாதலின், அப்பாடத்தைச் செவ்விதான முறையில், மாணவர் சுவைக்கக் கூடியதாகப், போதிக்க வேண்டுமென்னும் பேரவாக் கொண்டுள்ளோம். அதற்குரிய ஒரு தனிப்பட்ட அறையை அபிமானிகளெவராவது நவீன வசதிகளோடு ஆக்கித்தரக் கூடுமாயின் பெண்ணுலகம், என்றும் அவர்கட்குத்துதி கூறும்.

இவ்வாண்டு, வித்தியாபகுதியார் நடாத்தும், 8-ம் வகுப்புத் தெரிவுப் பரீட்சைக்கு மாணவரை ஆயத்தஞ் செய்து வருகிறோம். வட இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தார் நடாத்துகின்ற 5-ம் வகுப்புப் பரீட்சைக்கும் நாங்கள் வருடந்தோறும் மாணவரை அனுப்பி வருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இவ்வகுப்பு மாணவர்களில் 'தகுதியுள்ளவர்களைத் தெரிந்து, மத்திய பாடசாலைகளிற் கல்வி கற்பதற்கு வித்தியா விருத்திப் பணம் அளிப்பதற்கான பரீட்சைக்கும், விசேட ஆயத்தஞ் செய்கிறோம். சென்ற ஆண்டில் அப் பரீட்சைக்குத் தோற்றிய மூவரில், இருவர், தெரிவு செய்யப்பெற்று இப்போது மத்திய பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். இவ்வாண்டு இப் பரீட்சைக்கு 7 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

வித்தியா பகுதியாரோடும் ஆசிரிய சங்கத்தாரோடும் நாம் என்றும் ஒத்துழைப்பதையே பெருமையாகக் கொள்ளுகிறோம். ஆசிரிய சங்கத்தார் நடாத்துகின்ற சங்கீதப் போட்டி, பேச்சுப் போட்டி, விளையாட்டுப் போட்டி ஆதியாம் போட்டிகளிற் காலத்துக்குக் காலம் பங்கு பற்றிப் பரிசுகள் பெற்றுள்ளோம். இதுகாரணமாக எங்கள் பாடசாலை யாழ்ப்பாணப் பெரும் பிரிவில் எல்லோராலும் மதிக்கக்கூடிய ஒரு நிலையை அடைந்துள்ள தென்பதைச், சந்தோஷத்தோடு தெரிவிக்கின்றேன்.

பொருள் தேடுவது மாத்திரமல்ல, அதனைச் சிக்கனமாகச் செலவு செய்து, ஒரு பகுதியை மிச்சம் பிடித்துச் சேமித்து வைப்பதும், மிகவும் அவசியம். ஆதலால் சேமித்தலிலும் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வருகிறோம். கைத் தொழில் வகையாலும் பிறவாற்றாலும் பொருளைத் தேடி, அதனைச் சேமிப்பதில் ஆர்வமூட்டுவதற்கு, அரசாங்கத்தாற் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தை, யாம் ஸ்தாபித்துள்ளோம். இந்த நன் முயற்சியைப் பாராட்டும் வகையால் பல வாழ்த்துக்கடிதங்களும், வெற்றிச் சின்னமும், இலங்கை அரசாங்கத் தேசிய சேமிப்புச்சபையார் எங்களுக்கு வழங்கியுள்ளனர். இங்குள்ள மாணவர் இவ்வாண்டில் 7000 ரூபாவுக்குமேற் சேமித்துள்ளனர் என்பதைக் கேட்டு நீங்கள் மகிழ்வீர்களென எண்ணுகிறேன்- சேமிப்பு வெற்றிக் கொடி இப்பொழுது எங்கள் வசமே இருக்கிறது. குடியியல் என்னும் பாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்றுக்கொண்டிருக்கின்றனர். இதன் வாயிலாக மாணவர்களுக்கு அரசியலுணர்ச்சியும் ஆராய்ந்தறியும் ஆற்றலும் பெருகி வருகின்றன. சங்க நிகழ்ச்சிகள் யாவும் பழைய காலத்தினைப் போலன்றி உணர்ச்சியும் உற்சாகமும் தருவனவாய் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதனுல் கீழ், மத்திய, மேற்பிரிவென மாணவர் சங்கத்தை முப்பிரிவாக்கி ஆசிரியர்களின் மேற்பார்வையில் வாரந்தோறும் நடாத்திவருகிறோம். சமயவிஷயங்கள் யாவும் சமயவிருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்பட்டு வருகின்றன.

பல்வேறு துறைகளிலும் எமது முயற்சியைத் துரிதப்படுத்துவதற்கும, தொழில் விருத்தியை ஆராய்வதற்குமாக, ஆசிரியர்சங்கம், மாதமிருமுறை கூடப்பெறுகிறது. எங்கள் காரியசித்திக்கு இச்சங்கமே உறுதுணையாகவுள்ளது. இப்பாடசாலையாசிரியர்கள் தங்கள் தகைமைகளைப் பெருக்குவதிலும் அவ்வறிவினைக் கொண்டு மாணவர் நிலையை உயர்த்துவதிலும் பெருமுயற்சி எடுக்கின்றனர். சித்திரம், நடனம், தேகப் பயிற்சி, ஆங்கிலம் முதலியவைகளில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எமது மத்தியிலுண்டு. இவர்களின் விடாமுயற்சியினலே பாடசாலைப் பெறுபேறு வருடந் தோறும் கூடிக்கொண்டு வருகிறது. நாங்கள் இக்குறுகிய காலத்தில் பல துறைகளிலும் சன்மானம் பெற்றுள்ளோம். எனது உதவியாசிரியர்கள் தந்தொழிலைச் சம்பளத்திற்குரிய வேலையெனக் கருதாது கிராமத்திற்குச் செய்கின்ற தொண்டெனக் கருதித் தம்மாலியன்றவரை உழைத்து வருகின்றனர். இப்பொழுது நடக்கின்ற பொன்விழாவினைச் சிறப்பாக நடாத்துவதற்கு ஆரம்பத்திலிருந்தே சலியாது தொண்டாற்றி வருகின்றனர். அவர்களுடைய சேவை என்றும் மறக்கற்பாலதன்று.

இது ஒரு வளரும் ஸ்தாபனமாகும். தேவைகளோ மிகப்பல. தொண்டர்களோ மிகச்சிலர். எனினும் இக் கிராமத்தவர்கள் தங்கள் சந்ததியாரின் சேமாபிவிருத்தியை உள்ளூர நினைந்து, சலியாது தம்மாலியன்றவரை தொண்டாற்றி வருகின்றனர். அவர்களது நல்லாதரவினுலேயே இப்பாடசாலை இவ்வுன்னத நிலையை யடைந்துள்ளது. அவர்களுக்கும் இவ்வித்தியாசாலையின்பேரில் நன்றிகூறி இக்குறிப்பைப் பூர்த்திசெய்கின்றேன்.

வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச் சக்கரவர்த்தி கம்பனே

**வித்துவான் சி. கணேசையர் அவர்கள் எழுதியது.**

கம்பனைக் கவிச்சக்கரவர்த்தி என்று அறிஞர்கள் சிறப்பித்துக் கூறுவது ஒரு புனைந்துரையன்றென்பது அவனாற் பாடப்பட்ட இராமாவதாரம் என்னும் பெருங் காப்பியத்தினுள் வரும் சில செய்யுள்களின் அரும் பொருள்களையும், அப்பொருள்களைச் சந்தர்ப்பம் நோக்கி அமைத்துக் கூறும் சமயோசித புத்தியையும் துணிந்து நோக்குவார்க்கு நன்கு புலப்படும். அவன் சமயோசிதமாகக் கூறும் அப்பொருள்களை நோக்குமிடத்து அச்சிறப்புப் பெயர்தானும் அவனுடைய நுண்மதிக்குப் போதியதாகாது. அவனுடைய சமயோசித புத்தியைக்காட்டும் சில செய்யுட்கள் இங்கே காட்டத்தக்கனவாகும்.

இராமன் பஞ்சவடியிற் சென்று பர்ணசாலையை அமைத்து அதில் இருக்கும்போது அங்கே சென்ற சூர்ப்பனகை இராமனைக்கண்டு அவன் அழகில் ஈடுபட்டு மயங்கிக் காதல்கொண்டாள். காதல்கொண்டு அவன் தன்னை விரும்பத்தக்க ஒரு வடிவம் எடுத்துக்கொண்டு இராமனை அணுகித் தன்னை மணக்குமாறு இரங்கி நின்றாள். அப்பொழுது சீதையும் அங்கே வந்தாள். வந்த சீதையைக்கண்டு அவளுடைய பேரழகை நோக்கிய சூர்ப்பனகை, "இவள் தன் பக்கத்தில் இருக்கும்வரை இவன் என்னை விரும்பான். ஆதலால் இவளைத் தூக்கிக் கொண்டு சென்று மறைத்துவிட்டு வந்து இவனை உடன்படுத்திக் கூடுவேன்" என்று எண்ணி, இராமன் இல்லாத சமயம் நோக்கி, சீதையைத் தூக்கிக் கொண்டு செல்ல முயன்று இலக்குவனால் மூக்கு முதலிய உறுப்புக்களை அறுப்புண்டாள். அறுப்புண்டும் தன் காமம் தணியாதவளாய்ப் பின்னுஞ் சென்று இராமனை இரந்து அவனால் கோபிக்கப்பட்டு அவனைவிட்டு நீங்கினாள். நீங்கியவள் இராவணனிடஞ்சென்று சீதையின் அழகைக்கூறி அவனால் சீதையைக் கவரச்செய்து தான் இராமனைக் கூடலாம் என்று கருதினாள். கருதி இராவணனிடம் சென்று சீதையின் அழகைப்பற்றிக் கூறினாள். கூறுகின்றபோது இராவணனுக்குச் சீதைபாற் காதலை எழுப்பத்தக்கவிதமாகக் கூறவேண்டுமென்று கருதி அவ்வாறே கூறுகின்றாளாகச் சூர்ப்பனகை மேல் வைத்து,

**" பாகத்தி லொருவன் வைத்தான் பங்கயத்திருந்த போன்னை**
**ஆகத்திலொருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்**
**மேகத்தின் மின்னைமுன்னே வென்ற நுண்ணிடையை நீயும்**
**மாகத்தோள் வீர பெற்றாலெங்ஙனம் வைத்து வாழ்தி "**

என்று சமயோசிதமாக கம்பன் கூறுவதை நோக்கும்போது அவனுடைய மதி எத்துணை நுட்பமாகச் செல்கின்றது! எவ்வளவுக்குச் சீதையின் அழகை மேம்படுத்திக் கூறலாமோ அவ்வளவிற்கு மேம்படுத்திக் கூறுகின்றாள். எங்ஙனமெனில் முத்தேவர்களுள் ஒருவனாகிய சிவன் தன் காதலியை அவள் அழகு நோக்கி அவளைப் பிரியமுடியாமையினாலே தன் உடம்பின் ஒரு பாகத்திலேயே வைத்துக்கொண்டான். நாராயணனோ, தன் மனையாளை அவள் அழகு நோக்கி மார்பிலே வைத்துக்கொண்டான். பிரமனும் தன் காதலியைத் தன் நாவில் வைத்துக்கொண்டான். அவர்கள் வைத்துக்கொண்ட உறுப்புக்களிலே அவர்கள் மனைவியர்களாகிய அப்பெண்களிலும் சிறந்த ஒரு பெண்ணை நீ வைத்தால் அவ் அழகிற்கு அது பெருமையாகாது. ஆதலால் நீ அங்ஙனம் வைக்கமாட்டாய். அவளை நிலத்திலும் வைக்காய்! அப் பேரழகியை நீ அவ்வுறுப்புக்களிலும் சிறந்த உறுப்பிலே தான் வைத்து வாழ விரும்புவாய்! அவற்றிலும் சிறந்த உறுப்பு உத்தமாங்கமாகிய தலையே. ஆதலால் அதிலேதான் நீ வைத்து வாழ விரும்புவாய்! என்று அவனுடைய காதலை மிகவும் எழுப்பத்தக்கவிதமாகக் கூறும் நுண்மதி எவ்வளவு அதிசயிக்கத்தக்கது என்பது ஈண்டு அறியத்தக்கதாகும்.

இவ்வளவிலும் அவன் நுண்மதி அமைகின்றதா? அதன்மேலும் நுணுகிச் செல்கின்றது. அங்ஙனம் செல்லும் நுண்மதியினாலே சந்தர்ப்பம் நோக்கி அவன் காதலை எழுப்புமாறு அச் சூர்ப்பனகை கூற்றாக அமைத்த மற்றொரு பாடலும் நோக்கத்தக்கதாகும்.

**" பிள்ளைபோற் பேச்சினாளைப் பெற்றபின் பிழைக்க லாற்றாய்**
**கொள்ளைபோ கின்ற செல்வ மவளுக்கே கொடுத்தியைய !**
**வள்ளலேயுனக்கு நல்லேன் மற்றுநின் மனையில் வாழும்**
**கிள்ளை போன் மொழியார்க்கெல்லாம் கேடுசூழ்கின்றே**
**[னன்றோ "**

என்னும் இதன்கண் 'அண்ணா! நீ சீதை என்னும் பேரழகியைப் பெற்றால் நின் அரசச் செல்வம் முழுவதையும் அவளுக்கே தவறாது கொடுப்பாய். அதனால் நின் அந்தப் புரத்திலுள்ள பெண்களெல்லாம் அவளைக் கொண்டுவரச்செய்த என்பால் மிக்க கோபங்கொண்டு தங்களுக்குக் கேடு சூழ்ந்தாள் என்று கருதி என்னை வெறுப்பார்கள்' என்று அவனுக்கு முன்னையினும் காதலை மிகுதிக்குமாறு கூறியதை நோக்கும்போது, அவனுடைய நுண்மதி, ஒன்றைக் குறித்துப் பாடுங்கால் பாடப்பாட எவ்வளவு உயர்ச்சி அடைகின்றது என்பது அறியத்தக்கதாகும். நின் செல்வமெல்லாம் அவளுக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தி என்றதினுலும் நின் அந்தப் புரமகளிர்க்கெல் லாங் கேடு சூழ்ந்தேனுவேன் என்றதனுலும் சீதை நின் அந்தப்புர மகளிரினும் மிக மேம்பட்ட அழகுடையாள் என்பதை அவனுக்குப் புலப்படுத்தி அவனுக்குச் சீதை பாற் காதலை மிகவும் எழுப்பியவாறு காண்க.

இங்ஙனமெல்லாம் சீதையின் அழகை மேம்படுத்திக் கூறவே இராவணனுக்குக் காதற்கனல் மூண்டு எரி கின்றது. எரிகின்ற அக் காதலை மூட்டியது சூர்ப்பனகை இராமன் பால் வைத்த காதற் கனலே. அதனைக் கம்பன்,

கோபமு மறனு மானக் கோதிப்பு மென்றினைய வெல்லாம்
பாபநின் றிடத்து நில்லாப் பான்மைபோற் பற்று விட்ட
தீபமொன் றொன்றை யுற்ற லென்னலாஞ் செயலிற்புக்க
தாபமுங் கோப நோயு மாருயிர் கலந்த வன்றே.

என்னுஞ் செய்யுளின் "தீபம் ஒன்று ஒன்றையுற்றால் என்னலாஞ் செயலிற் புக்க தாபமும் காமநோயும் ஆருயிர் கலந்த" என்ற அடிகளாலே விளக்கிக் கூறுகின் ருன். ஒரு தீபம் மற்ருெரு தீபத்தைப் பொருந்தி அத ஞற் கொளுத்தப்பட்டு எரிகின்ற தன்மைபோன்றது என்று சொல்லத்தக்க தன்மையோடு புக்க தாபமும் காமநோயும் எனவே சூர்ப்பனகை கொண்ட காம வேட் கையும் அதனுலான நோயும் இராவணனுக்குக் காம வேட்கையையும் நோயையும் பற்றவைத்தன என்பதும் ஒன்றினின்ருென்று பற்றி இரு தீபமு மெரிவதுபோல இருவருக்குங் காதற்கனல் மேற்பட்டுக்கொண்டே யிருந்த தென்பதும் பெறப்படவைத்துக் கூறியது காண்க.

இங்ஙனமன்றி ஒரு தீபம் மற்ருெரு தீபத்தையேற் றியதுபோலக் காமநோயும் அதனுலாய தாபமும் ஆகிய இரண்டும் உண்டாயின என்று பொருள்கூறல் சிறந்த தன்று. முற்கூறிய பொருள் பொருத்தமாதல்,

மீன் கோண்டோடும் வேலை மேகலை யுலக மேத்தத்
தேன் கோண்டோடுங் கூந்தற் சிற்றிடைச் சீதை யென்னும்
மான் கோண்டோடு நீ யுன் வாள் வலி யுலகங் காண
யான் கோண்டோடும் வண்ண மிராமனைத் தருதி யென்பால்.

என்னுஞ் செய்யுளானும், இராவணன் தன்முன் தோன் றிய சீதையின் உருவெளியைக்காட்டி இவள்தானு நீ சொன்ன சீதை யென்ன,

செந்தா மரைக்கண் ணெடுஞ் செங்கனி வாயி னேடும்
சந்தார் தடைந்தோ ளொடுந்தாழ் தடக் கைகளோடும்
அந்தா ரகலத் தோடுமஞ்சனக் குன்ற மென்ன
வந்தானிவனுகுமவ் வல்வி லிராம னென்ருள்.

என்று சூர்ப்பநகை கூறியதாகச் சொன்ன செய்யுளா னும் உற்றுநோக்கி அறியத்தகும்.

இராவணன் தன்முன் தோன்றிய உருவெளியைக் காட்டி இவள் தானு சீதையென்று சூர்ப்பநகையை வினுவ, அவளுக்குத் தோன்றிக்கொண்டிருந்த இராம னுருவெளி அங்கும் அவளுக்குத் தோன்றுதலால் அவள் இவன்தான் இராமன் என்று கூறினுள் எனச் சமயோ சிதமாக நகைச்சுவையையமைத்து எவர்க்கும் பெருஞ் சிரிப்புத்தோன்றக் கூறிய கம்பனது மதிநுட்பம் எந்தக் கவிக்குத்தான் அமையும்?

கவிகள் எப்போதும் ஆழ்ந்த பொருளுடையனவாக வும், அப்பொருளை மிக வெளிப்படையாகக் காட்டுந் தெளி வுடையவாகவும், ஓசை யொழுக்குடையவாகவும் இருத்தல் வேண்டும். அதனைக் கம்பன் நன்ருக அறிந்ததாற்ருன், சூர்ப்பனகைப் படலத்துப் "புவியினுக் கணியாய்" என் னுஞ் செய்யுளில், ஆன்ற பொருளுடந்து புலத்திற்ரு கிச் சவியுறத் தெளிந்து தண்ணென் ருெழுக்கமுந் தழுவி என்றும், பம்பைப்படலத்து,

எற் பொரு ளாகர்த மிருக்கை யீதெனக்
கிற்ப தோர் காட் சிய தெனினுங் கீழுறக்
கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய
சொற் பொரு ளாமெனத் தோன்றல் சான்றது.

என்றும் தெரித்துக்கூறினுன். கம்பன் கவிகள் யாவும் இத்தகையவே.

---

பொன் விழாமலர் வெளியிடுவதற்கு முற்பணம் கொடுத்துத் துணைசெய்தவர்கள்.

திரு. A. சுப்பிரமணியம்,
செல்வி சு. அரியமலர்,
,, நா. ஞானவதி,
,, வ. புவனேஸ்வரி,
,, க. செல்லம்மா,
,, து. மகேஸ்வரி

செல்வி பொ. மங்கையர்க்கரசி,
,, சி. மகேஸ்வரி,
,, வே. மனேன்மணி,
,, க. இலட்சுமி.

திரு. து. ஜயாத்துரை அவர்கள்
,, சி. கந்தையா ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடபகுதி வித்தியாதரிசகர்
# திரு. அ. சரவணமுத்து அவர்கள் பொன் விழா வைபவத்தின்போது
நிகழ்த்திய சொற் பொழிவின் சாரம்.

தெல்லிப்பழை கிழக்குச் சைவப்பிரகாச வித்தியா சாலையை ஸ்தாபித்து நன்முயற்சியால் அதை இக் கிராமத்தின் கண்ணென மிளிரச்செய்த பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் என்னும் பெருந்தகையார்,

"கேடில் விழுச் செல்வங்கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றையவை" என்னுந் திருவள்ளுவரின் வாக்கை இலட்சியமாகக்கொண்டு, தமிழ்மொழியினைப் பாங்குடன் பரப்பிக் கிராம மக்கள் நற்பயனைப்பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் இக் கல்லூரியைப் பல்லாண்டுகளாக வளர்த்துவந்தார். அன்று ஒரு குழந்தையாயிருந்தவள் இன்று ஓர் இளம் மங்கையாய்த் திகழ்கின்றாள். சிறு குடிசையுடனிருந்தவள் இன்று பலவகையான சிறப்புகள்வாய்ந்து அழகான கட்டிடங்களுடன் ஒளிச்சுடரை எங்கும் பரப்பிக்கொண்டிருக்கின்றாள்.

ஓர் கிராமத்தின் உயிர்நாடி அங்குள்ள கல்லூரி. அவ்வரிய அன்னையைப் போற்றி வளர்ப்பது ஒவ்வொருவரின் சிறந்த கடமை. ஆங்கில மோகத்திலமிழ்ந்தியிருந்தகாலம் போய்விட்டது. நல்ல செந்தமிழ், தீந்தமிழ் படிக்கவேண்டியகாலம் வந்துவிட்டது. புதிய கல்வித்திட்டத்திலே ஒரு முதற்றரமான ஆங்கிலக் கல்லூரி வகிக்கும் இடத்தை இத்தமிழ்க் கல்லூரி அடைய வேண்டும். விஞ்ஞான, பௌதிக, தாவர சாஸ்திரங்கள் கற்பிப்பதற்குவேண்டிய பரிசோதனைச் சாலைகளும், வர்த்தகம் கைத்தொழில்கள் கற்பிப்பதற்குத் தொழிற்கூடங்களும் அமைக்கப்படவேண்டும்.

இவ்வித்தியாசாலை ஸ்தாபகருக்கு எம்மாற் செய்ய வேண்டிய பெரும் நன்றி இப்பாடசாலைக்கு ஒவ்வொரு வருந் தங்களாற்கூடிய சரீர, பண உதவிகள் செய்து அதைக் கற்றற்குரிய சகல வசதிகளோடுங்கூடிய ஓர் உயர்தரக் கல்லூரியாய் விளங்கவைப்பதே. வித்தியா தானமே எல்லாத் தானங்களிலுஞ் சிறந்தது.

உண்மையான கல்விமான்கள், தர்மவான்கள் யாவரையும் உலகம் அறிந்துகொள்வதில்லை. தோற்றத்தையும் வெளி வேஷங்களையுங் கண்டு, புலமையையுந் தர்மசிந்தனையையும் வரையறுக்கமுடியாது. வித்தியா சாலை ஸ்தாபகர் வறுமை நிலையிலிருந்தபொழுதும் வைதிகநெறி தவறாமல், கல்விப்பயிரை வளர்ப்பதற்கு மிக ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உழைத்து வந்திருக்கின்றார். அவர் எம்மத்தியிலிருந்து இன்று இம்மங்கையின் சிறப்பைக் காணாமலிருப்பது அதிக துயரத்தைத்தருகின்றது. அவருடைய பூதவுடம்பு அழிந்தபொழுதும் அவருடைய ஆன்ம சக்தி இன்றும் இங்கே ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

சைவத்தையுந் தமிழையும் வளர்க்கும் இவ்வித்தியாசாலைப் பழைய மாணவரென்ற முறையில் இவ் வைபவத்திலீடுபட்டு இப் பெரியாரின் படத்தைத் திறந்துவைக்கும் பெருமையை எமக்குக் கொடுத்த பொன்விழாச் சபையினர்க்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன். இறைவன் திருவருளால் இக் கல்லூரி மேன்மேலோங்கி வளர்ச்சிபெற்றுத் தமிழன்னைக்கும் நாட்டிற்கும் அருந்தொண்டாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

---

# பொன் விழாமலர் வெளியிடுவதற்கு முற்பணம் கொடுத்துத் துணை செய்தவர்கள்.

1. திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள்
2. ,, செ. ஆ. சுவாமி நாதன் ,,
3. பிரம்மஸ்ரீ து. செல்லையர் ,,
4. திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை ,,
5. ,, ந. சின்னத்தம்பு ,,
6. ,, செ. சிவசுப்பிரமணியம் ,,
7. ,, சி. செல்லத்துரை ,,
8. திரு நா. ஆறுமுகம் அவர்கள்
9. ,, தி. சுந்தரமூர்த்தி ,,
10. ,, பொ. கனகரத்தினம் ,,
11. ,, பொ. கந்தையா ,,
12. ,, க. சுப்பிரமணியம் ,,
13. திருமதி சி. வள்ளியம்மை ,,
14. செல்வி ம. பாலாம்பிகை ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா

## நிகழ்ச்சிகள்

## 4-10-52

✶

**தலைவர் : கௌரவ சு. நடேசன்** B. A., B. L., F. R. E. S.
(தபால், தந்தி மந்திரியார்)

1. தேவாரம்.
2. வந்தனோபசாரப்பா
3. வரவேற்புரை
   — திரு. T. T. ஜயரத்தினம் அவர்கள், B. A. (Lond)
4. காரியதரிசியின் அறிக்கை
5. தனாதிகாரியின் அறிக்கை
6. தலைவர் முன்னுரை
7. ஞாபகார்த்தக் கட்டிடம் திறந்து வைத்தல்
   — திரு. மு. இராமுப்பிள்ளை அவர்கள்.
8. ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களின் படம் திறந்து வைத்தல்
   — திரு. அ. சரவணமுத்து அவர்கள் (பகுதி வித்தியாதரிசி)
9. காலஞ்சென்ற திரு நெ. ஆறுமுகச் சட்டம்பியார் அவர்களின் படம் திறந்து வைத்தல்
   — திருமதி தியாகராசா சிவநாயகி அம்மையார் அவர்கள்
10. திரு. மு. இராமுப்பிள்ளை அவர்களின் அன்பளிப்பாகவுள்ள வாசிகசாலைக் கட்டிடம் திறந்து வைத்தல்
   — தலைவர் அவர்கள்
11. உபந்நியாசம் : "பாடசாலையும் சமூகமும்"
   — திரு. M. சின்னத்தம்பி அவர்கள், B. A. (Hons.) Dip. in Ed., (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்)
12. பாடசாலை மாணவரின் நிகழ்ச்சிகள்
13. இசை விருந்து
   — திருமதி சண்பகம் சேஷாத்திரி அவர்கள்
14. துதி கூறல்
15. பாடசாலைக் கீதமும் தேவாரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை

# பொன் விழா நிதி விபரம்

★

## தெல்லிப்பழை

| | ரூ. ச. |
|---|---|
| திரு. தெ. து. ஜெயரத்தினம் | 100-00 |
| ,, சு. அம்பலவாணர் | 50-00 |
| ,, சி. நாகலிங்கம் | 50-00 |
| ,, ஆ. கனகசபை | 50-00 |
| ,, T. தம்பிப்பிள்ளை | 50-00 |
| ,, ந. சபாரத்தினம் | 25-00 |
| ,, அ. சுப்பிரமணியம் | 25-00 |
| ,, ஆ. செல்வரத்தினம் | 25-00 |
| ,, சி. கந்தவனம் | 25-00 |
| ,, தி. அருமைநாயகம் | 25-00 |
| ,, பொ. அம்பலவாணர் | 25-00 |
| ,, சே. தியாகராசா | 25-00 |
| ,, வே. முருகேசபிள்ளை | 25-00 |
| ,, க. ஐயாத்துரை | 25-00 |
| ,, ந. சுந்தரமூர்த்தி | 25-00 |
| ,, சோ. ஆறுமுகம் | 25-00 |
| ,, ச. கனகராயர் | 25-00 |
| ,, செ. கனகநாயகம் | 25-00 |
| ,, சி. இரத்தினசபாபதி | 25-00 |
| ,, பி. ஆறுமுகம் | 25-00 |
| ,, சி. தில்லையர் | 25-00 |
| ,, மு. குணநாயகம் | 25-00 |
| ,, தெ. வ. செல்லப்பா | 25-00 |
| ,, க. இளையதம்பி | 20-00 |
| Dr. வி. சுப்பிரமணியம் | 20-00 |
| திருமதி தி. பொன்னையா | 20-00 |
| திரு. மு. சின்னப்பா | 35-00 |
| ,, ச. சின்னப்பா | 20-00 |
| ,, சி. ஆறுமுகம் & ஆ. சிவபாதம் | 20-00 |
| ,, நா. இராமலிங்கம் | 15-00 |
| ,, க. மயில்வாகனம் | 15-00 |
| ,, க. சதாசிவம் | 15-00 |
| ,, தெ. மு. செல்லப்பாபிள்ளை | 15-00 |
| ,, சி. சிவசுப்பிரமணியம் | 25-00 |
| ,, த. குருநாதபிள்ளை | 15-00 |
| ,, தெ. மு. காசிப்பிள்ளை | 15-00 |
| ,, தி. ஆறுமுகசாமி | 10-00 |
| ,, வ. சுப்பிரமணியம் | 10-00 |
| ,, தி. திருச்சிற்றம்பலம் | 10-00 |
| ,, ந. சின்னத்தம்பு | 10-00 |
| ,, த. முத்துக்குமாரு | 10-00 |
| திருமதி க. இராசம்மா | 10-00 |
| திரு. அ. கனகசுந்தரம் | 10-00 |
| ,, ம. சி. சிதம்பரப்பிள்ளை | 10-00 |
| ,, சி. சுப்பிரமணியம் | 10-00 |
| ,, சி. இறங்கநாதன் | 10-00 |
| ,, நா. பாலகிருஷ்ணர் | 10-00 |
| ,, நா. கதிரமலை | 10-00 |
| ,, அ. கந்தையா (ஆசிரியர்) | 10-00 |
| ,, இ. முருகையா | 10-00 |

| | ரூ. ச. |
|---|---|
| திரு. க. சுப்பையா | 10-00 |
| ,, ம. சிதம்பரநாதன் | 10-00 |
| ,, த. வேலாயுதம் | 10-00 |
| ,, கு. கதிரையாண்டி | 10-00 |
| ,, இ. கனகசபை | 10-00 |
| ,, இ. சிவசம்பு | 10-00 |
| ,, மு. வன்னியசிங்கம் | 10-00 |
| திருமதி சு. சிவக்கொழுந்து | 10-00 |
| ,, சி. மகேஸ்வரி | 5-00 |
| ,, தா. தில்லைமுத்து | 5-00 |
| திரு. பொ. அப்பாத்துரை | 5-00 |
| ,, இ. பொன்னையா | 5-00 |
| ,, கி. சின்னத்துரை | 5-00 |
| ,, கா. செல்லையா | 5-00 |
| ,, க. முத்துலிங்கம் | 5-00 |
| ,, V. சுப்பிரமணியம் | 5-00 |
| ,, கு. உருத்திராபதி | 5-00 |
| பிரமஸ்ரீ து. செல்லையர் | 5-00 |
| திருமதி வ. தங்கமுத்து | 5-00 |
| திரு. சி. சின்னத்தம்பி | 5-00 |
| ஒரு நண்பன் | 5-00 |
| திரு. பொ. கண்ணப்பர் | 5-00 |
| பிரமஸ்ரீ செ. நடராசக்குருக்கள் | 5-00 |
| திரு. சு. சொக்கலிங்கம் | 5-00 |
| ,, அ. கந்தையா | 5-00 |
| ,, கி. முத்தையா | 3-00 |
| பிரமஸ்ரீ சி சிவசுப்பிரமணிய ஐயர் | 3-00 |
| திரு. செ. சோமசுந்தரம் | 2-00 |

## மல்லாகம்

| | |
|---|---|
| திரு. அ. சரவணமுத்து | 35-00 |
| ,, செ. ஆ. சுவாமிநாதன் | 25-00 |
| ,, து. க. கனகராயர் | 15-00 |
| ,, S. T. இராசரத்தினம் | 10-00 |
| ,, சு. நவரத்தினம் | 10-00 |
| ,, அ. அப்பாத்துரை | 10-00 |
| திருமதி அ. சரஸ்வதிப்பிள்ளை | 10-00 |
| திரு. து. பொன்னம்பலம் | 7-00 |
| ,, இ. அருணம்பலம் | 5-00 |
| ,, V. குட்டித்தம்பி | 5-00 |
| ,, S. விக்னராசா | 5-00 |
| ,, சு. சபாரத்தினம் | 5-00 |
| ,, ச. அம்பிகைபாகன் | 5-00 |
| ,, S. T. விசயரத்தினம் | 5-00 |
| ,, இ. நம சிவப்பிரகாசம் | 5-00 |
| ,, S. தம்பு | 2-00 |

## சுன்னாகம்

| | |
|---|---|
| Dr. S. இராமநாதன் | 10-00 |
| திரு. க. இராசநாயகம் | 5-00 |
| ,, மு. கனகராயர் | 5-00 |
| ,, சி. கதிரமணியம் | 5-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பு

| | ரூ. ச. |
|---|---|
| திரு. V. T. பாலசுப்பிரமணியம் | 25-00 |
| ,, பொ. கந்தையா | 25-00 |
| ,, அ. மண்டலநாயகம் | 25-00 |
| ,, சு. சம்பந்தநாதன் | 25-00 |
| ,, து. தர்மராசா | 25-00 |
| ,, சி. செல்வரத்தனம் | 15-00 |
| ,, கா. செல்வத்துரை | 15-00 |
| ,, சோ. நாகரத்தினம் | 15-00 |
| ,, ந. ஆனந்தம் | 10-00 |
| ,, மு. தனபாலசிங்கம் | 10-00 |
| ,, S. சிவப்பிரகாசம் | 10-00 |
| ,, சி. கதிரித்தம்பி | 10-00 |
| ,, க. இராசரத்தினம் | 10-00 |
| ,, வே. செல்வரத்தினம் | 10-00 |
| ,, இ. தில்லைநாயகம் | 10-00 |
| ,, சே. சி. உடையார் | 10-00 |
| ,, K. தெய்வேந்திரம் | 10-00 |
| ,, இ. சபாரத்தினம் | 10-00 |
| ,, சி. முருகேசு | 5-00 |
| ,, ச. சுப்பிரமணியம் | 5-00 |
| ,, ஷ. சண்முகம் | 5-00 |
| ,, V. புவிராசசிங்கம் | 5-00 |
| ,, N. இராசரத்தினம் | 5-00 |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| Dr. S. சுப்பிரமணியம் | 150-00 |
| திரு. மு. இராசநாயகம் | 25-00 |
| ,, க. இ. சுப்பிரமணியம் | 25-00 |
| ,, கு. வன்னியசிங்கம் | 25-00 |
| Dr ச. இராசநாயகம் | 15-00 |
| ,, S. வெற்றிவேலு | 15-00 |
| ,, குருசாமி | 10-00 |
| திரு. ந. சங்கரப்பிள்ளை, கொல்லங்கலட்டி | 25-00 |
| ,, A. சங்கரப்பிள்ளை, குருநாகல் | 10-00 |

| | ரூ. ச. |
|---|---|
| திரு. பொ. நாகலிங்கம், செனேட்டர் | 10-00 |
| ,, S. கந்தையா, கண்டி | 10-00 |
| ,, P. விசுவலிங்கம், மயிலிட்டி | 10-00 |
| ,, S. இலங்கைநாயகம் ,, | 10-00 |
| ,, S. அருணாசலம், மயிலிட்டி தெற்கு | 10-00 |
| ,, E கந்தையா, அநுராதபுரம் | 10-00 |
| ,, பொ. நவரத்தினம், பலாலி | 5-00 |
| ,, சி. கதிரிப்பிள்ளை, விழிசிட்டி | 5-00 |
| ,, V. C. துரையப்பா, கண்டி | 5-00 |
| ,, S. K. தம்பி, குருநாகல் | 5-00 |
| ,, S. சின்னத்தம்பு, அநுராதபுரம் | 15-00 |
| ,, ந. பூதப்பிள்ளை, மயிலிட்டி | 10-00 |
| ,, பூ. காசிநாதர். மயிலிட்டி | 5-00 |

### மலாயா

| | |
|---|---|
| திரு. E சின்னத்துரை | 100-00 |
| ,, செ. அ. செவ்வந்திநாதர் | 100-00 |
| ,, V. கதிரிப்பிள்ளை | 87-00 |
| ,, K. பொன்னம்பலம் | 25-00 |
| ,, க. ஆறுமுகம் | 13-25 |
| ,, K. அப்பாக்குட்டி | 5-00 |

### பாடசாலைகள்

| | |
|---|---|
| மகாஜனக் கல்லூரி | 55-00 |
| ஆங்கில பாடசாலை, மல்லாகம் | 20-00 |
| ஞானோதய வித்திசாலை, மயிலிட்டி | 19-00 |
| நடேஸ்வரக் கல்லூரி | 15-00 |
| மகாதேவ வித்தியாசாலை, குரும்பசிட்டி | 10-00 |
| அ. மி. பாடசாலை, மல்லாகம் | 10-00 |
| அ. மி. பாடசாலை, மாவை தெற்கு | 10-00 |
| அருணாசல வித்தியாசாலை, அளவெட்டி | 5-00 |
| மொத்தம் ... | 2676-25 |

## வரவு செலவுக் கணக்கு

| வரவு | ரூ. ச. |
|---|---|
| தெல்லிப்பழை ... ... | 1313-00 |
| மல்லாகம் } சுன்னாகம் } ... ... | 184-00 |
| கொழும்பு ... ... | 295-00 |
| யாழ்ப்பாணம் ... ... | 340-00 |
| வேறிடங்கள் ... ... | 70-00 |
| மலாயா ... ... | 330-25 |
| பாடசாலைகள் ... ... | 144-00 |
| மேலதிகச் செலவு ... ... | 1187-52 |
| மொத்தம் ... | 3863-77 |

| செலவு | ரூ. ச. |
|---|---|
| கட்டிடம், மேசன் கூலி ... ... | 1326-50 |
| ,, தச்சுவேலை ... ... | 1471-80 |
| கிடுகம், வேய்தற் கூலியும் ... ... | 183-05 |
| மாபிட்கல் கூலி ... ... | 147-00 |
| படங்கள் ... ... ... | 128-40 |
| விளம்பரங்கள் முதலியன ... ... | 196-15 |
| படம், புளொக் ... ... | 63-00 |
| சில்லறைச் செலவு ... ... | 47-87 |
| பொன் விழாக் கொண்டாட்ட உத்தேசச்செலவு | 300-00 |
| மொத்தம் ... | 3863-77 |

தெல்லிப்பழை,
3-10-52

சே. சிவசுப்பிரமணியம்
ந. சுந்தரமூர்த்தி
நே. ஆ. சுவாமிநாதன்
தனதிகாரிகள், 3-10-52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தகுமரன் அச்சகம் வயாவிளான்

பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களது படத்தை வேதனமின்றி வரைந்துதவிய மகாஜனக் கல்லூரியின் சித்திரபாட ஆசிரியர் திரு. D. நிமால் உபசேன அவர்களது அன்பு என்றும் பாராட்டுதற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்துவானம்
பல்குக வளங்கள் எங்கும்பரவுக அறங்கள் இன்பம்
நல்குக வுயிர்கட் கெல்லாம் நான்மறைச்சைவம் ஓங்கிப்
புல்குக உலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

பத்திராதிபர் குழுவினர் :—

திரு. தி. சுந்தரமூர்த்தி
,, சி. செல்லத்துரை
,, நா. ஆறுமுகம்

இம்மலர் தெல்லிப்பழை கிழக்குச் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பொன்விழாச் சபையின் சார்பாக ஷை வித்தியாசாலை ஆசிரியர்களால் வெளியிடப்பெற்றது.

நாவலர் அச்சுக்கூடம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org